Registered as a NewsPaper

விலை ரூபா : 8.00

# ஈழநாதம்

மக்கள் நாளிதழ்

பக்கங்கள்-12

நாதம் -16 திருவள்ளுவர் ஆண்டு- 2036 சித்திரை-31 14-05-2005 சனிக்கிழமை ஓசை 85


S.M கோல்ட் ஹவுஸ்
வவுனியா நகரில்
அசல் 22 கரட்
தங்க நகைகளை
உங்கள்
விருப்பத்திற்கேற்ப
தெரிவு செய்து
பெற்றுக்கொள்ள
S.M கோல்ட் ஹவுஸ்
இல:-46A, தர்மலிங்கம் வீதி,
வவுனியா.
உரிமையாளர்:-
S.M.சண்முகரத்தினம்
T.P: 024-222 4247 (சி-11901)

# பொதுக்கட்டமைப்பு உருவாகாவிட்டால்

# மாற்றுத்திட்டத்தை தலைமை பரிசீலிக்கும்

## அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன்



(அலுவலக செய்தியாளர்)

**பொதுக்கட்டமைப்பு உருவாகாவிட்டால் அதற்கான மாற்றுத்திட்டம் குறித்து எங்களுடைய தலைமைப்பீடம் நிச்சயமாக தீவிர பரிசீலனை செய்யும் என அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் அவர்கள் தெரிவித்தார். நேற்று நோர்வேத்தூதுவர் ஹான்ஸ் பிரஸ்கருடனான சந்திப்பின் பின்னர் அவர் இவ்வாறு கூறினார்.**

*.செய்தியாளர்களுக்கு அவர் அளித்த பேட்டியின் விபரம் வருமாறு.

இச்சந்திப்பில் கலந்துரையாடப்பட்ட விடயம் என்ன?

முக்கியமாக இன்றைய சந்திப்பில் நாங்கள் இப்பொழுது உள்ள நெருக்கடியான நிலைமைகள் சம்பந்தமாக நோர்வேத்தரப்புக்கு எடுத்து விளக்கியிருக்கின்றோம். அண்மைக்காலத்தில் சமாதான முன்னெடுப்புகளுக்கும், யுத்த நிறுத்த சூழல்களை அச்சுறுத்தும் வகையிலும், சிறிலங்கா அரசாங்கத்தாலும், படைத்தரப்பாலும் நடவடிக்கைகள், எங்கள் மக்கள் மீதான படுகொலை முயற்சிகள், இராணுவ

(12ஆம் பக்கம் பார்க்க)

## அமைதிப்பேச்சுக்களில் ஒருவகை முன்னேற்றமாக பொதுக்கட்டமைப்பை நாங்கள் கருதுகின்றோம்

-இலங்கைக்கான அமெரிக்கத்தூதுவர் அறிவிப்பு

சிறிலங்கா அரசுக்கும், தமிழீழ விடுதலைப்புலிகளுக்கும் இடையே பொதுக்கட்டமைப்பை உருவாக்க அமெரிக்கா ஆதரவு தெரிவித்துள்ளது.

கொழும்பில் ஊடகவியலாளர்களிடம் பேசிய இலங்கைக்கான அமெரிக்கத்தூதர் ஜெப்ரி லான்ஸ்டெட் இதைத் தெரிவித்தார். அவர் மேலும் கூறியதாவது: பொதுக்கட்டமைப்பின் மூலம் ஆழிப்பேரலை நிவாரண உதவிகள் முழுவீச்சில் மக்களுக்கு பகிர்ந்தளிக்கப்படும் என்ற நம்பிக்கை உள்ளது. அத்துடன், இடைநிறுத்தத்திற்குள்ளாகியிருக்கும் அமைதிப்பேச்சுக்கள் சரியான திசையில் செல்ல இந்தக் கட்டமைப்பு உதவக்கூடும். அமைதிப் பேச்சுகளில் ஒரு வகையிலான முன்னேற்ற நடவடிக்கையாகவே பொதுக்கட்டமைப்பை நாங்கள் எண்ணு

(12ஆம் பக்கம் பார்க்க)

## பொதுக்கட்டமைப்பு எப்போது கைச்சாத்தாகும் என்பதைச் சரியாகக் கூறமுடியாதுள்ளது

-கிளிநொச்சியில் ஹான்ஸ் பிரஸ்கர்

(அலுவலக செய்தியாளர்)

பொதுக்கட்டமைப்பு எப்பொழுது கைச்சாத்தாகும் எனச் சொல்ல முடியாதிருப்பதாக நோர்வேயின் இலங்கைக்கான தூதுவர் ஹான்ஸ் பிரஸ்கர் தெரிவித்தார்.

அரசியல்துறைப் பொறுப்பாளருடன் நேற்றுக் கிளிநொச்சியில் இடம்பெற்ற சந்திப்பின் பின் ஊடகவியலாளர் மத்தியில் பேசுகையில் மேலும் தெரிவித்ததாவது, சுனாமிக்கான பொதுக்கட்டமைப்புத் தொடர்பாகவும் நாம் கலந்துரையாடினோம். இது தொடர்பாக நாம் ஒரு நல்ல கலந்துரையாடல் ஒன்றையும் மேற்கொண்டோம். ஆனால், இது எப்பொழுது கைச்சாத்தாகும் எனச் சொல்ல முடியாது. ஒரு பொது உடன்பாடு ஒன்று உருவாக்கப்பட்டதன் பின் இது

(12ஆம் பக்கம் பார்க்க)

## ஜே.வி.பி, முஸ்லிம் காங்கிரசுடனான அகாஸியின் பேச்சுக்கள் தோல்வி!

(கொழும்பு)

ஜப்பானின் விசேட தூதுவர் நேற்று முன்தினம் நடத்திய இரு பேச்சுவார்த்தைகளும் தோல்வி அடைந்துள்ளன. அகாஸி முஸ்லிம் காங்கிரசையும், ஜே.வி.பியினையும் தனித்தனியே சந்தித்துப் பேசினார்.

இலங்கை அரசுக்கும்,விடுதலைப்புலிகளுக்கும் இடையில் உத்தேசிக்கப்பட்டுள்ள பொதுக்கட்டமைப்பிற்கு இரு தரப்பிடமும் யசூசி அகாஸி ஆதரவைப் பெற முயற்சித்தபோதிலும் அது சாத்தியப்படவில்லை. பொதுக்கட்டமைப்பினை ஒருபோதும் ஏற்க முடியதென முஸ்லிம் காங்கிரசும், ஜே.வி.பி.யும் தெரிவித்துள்ளன. இன்று அகாஸி கிளிநொச்சியில் விடுதலைப்புலிகளின் அரசியல் துறை பொறுப்பாளரைச் சந்திக்கவுள்ளார். (32)

## திருகோணமலை மாவட்ட மட்ட மெய்வல்லுநர் போட்டியில்

## தமிழீழத் தேசியக் கொடி ஏற்ற மறுக்கப்பட்டதால் தமிழ் மாணவர்கள் மைதானத்தை விட்டு வெளியேற்றம்

தமிழீழ தேசியக் கொடியேற்ற மறுக்கப்பட்டதால் திருமலை மாவட்ட மட்ட மெய்வல்லுநர் போட்டிகளை தமிழ்மாணவர்கள் புறக்கணித்து மைதானத்தை விட்டு நேற்று வெளியேறினர்.

இச்சம்பவம் குறித்து தெரிய வந்துள்ளதாவது, திருகோணமலை மாவட்ட மெய்வல்லுநர் விளையாட்டுப் போட்டிகள் நேற்று ஆரம்பித்தபோது சிறிலங்காவின் தேசிக்கொடி ஏற்றப்பட்டது.

இதன்போது தமிழ் மொழிமூல மாணவர்கள் தமிழீழ தேசியக் கொடியும் ஏற்றப்பட வேண்டுமெனக் கோரிக்கை விடுத்தனர். எனினும் அரசாங்க அதிகாரி கள் இதனை ஏற்றுக்கொள்ள வில்லை. தாம் அரசாங்க அதிகாரிகள் என்ற அடிப்படையில் இலங்கையின் தேசியக் கொடியை மாத்திரமே ஏற்ற முடியுமென தெரிவித்தனர்.

(12ஆம் பக்கம் பார்க்க)

## துப்பாக்கிச் சூட்டுக் காயங்களுடன் இளைஞனின் சடலம் மீட்பு!

(மட்டக்களப்பு நிருபர்)

மட்டக்களப்பு-வாழைச்சேனை வீதி வந்தாறுமூலையில் நேற்றுக் காலை துப்பாக்கிச் சூட்டுக்காயங்களுடன் இளைஞனின் சடலத்தை சிறிலங்கா பொலிசார் கண்டெடுத்துள்ளனர்.

திருகோணமலை உப்புவெளியைச் சேர்ந்த விமலேந்திரன் மனோஜ்குமார் (வயது-25) என அவர் அடையாளம் காணப்பட்டுள்ளார்.

கைகள், கால்கள், கண்கள் கட்டப்பட்ட நிலையில் கிழக்கு பல்கலைக்கழகத்திற்கு அருகாமையில் இவரது சடலம் கண்டெடுக்கப்பட்டுள்ளது. கொலைக்கான காரணம் இதுவரை கண்டறியப்படவில்லை என ஏறாவூர் பொலிசார் தெரிவித்தனர்.

## மக்கள் எழுச்சியை அடக்க முற்பட்டால் தமிழ்த் தேசியத்திற்காகப் போராடுவோம்

*-தமிழீழ மாணவர் சங்க மன்னார் கிளை எச்சரிக்கை*

(மன்னார்)

மக்கள் எழுச்சியை சமாதான காலத்தில் அடக்க முற்பட்டால் தமிழ்த்தேசியத்திற்காக போராட வேண்டிய நிலை ஏற்படுமென தமிழீழ மாணவர் சங்கத்தின் மன்னார் கிளை எச்சரிக்கை விடுத்துள்ளது.

மன்னாரில் சிறிலங்கா பொலிசாரின் வன்முறை நடவடிக்கைகளைக் கண்டித்து தமிழீழ மாணவர் சங்கத்தின் மன்னார் கிளையினர் நேற்றுக் கடிதம் மூலம் கண்டனம் வெளியிட்டுள்ளனர்.

இந்தக் கண்டனக் கடிதங்கள் இலங்கை போர் நிறுத்தக்கண்காணிப்புக் குழு ஐக்கிய நாடுகள் சபை மற்றும் சனாதிபதிக்கான கோரிக்கை மனு ஆகியன அரசாங்க அதிபரிடம் கையளிக்கப்பட்டன.

மன்னாரில் அண்மையில் நடைபெற்ற எதிர்ப்புப் போராட்டம் ஒன்றின்போது தமிழீழ மாணவர் சங்க காரியாலயத்தின் மீது பொலிசாரினால நடத்தப்பட்ட தாக்குதலுக்கு எதிர்ப்புத் தெரிவித்தே மாணவர்களால்

(12ஆம் பக்கம் பார்க்க)

## வரி விளம்பரம்

### தென்னம்பிள்ளைகள் விற்பனைக்கு

மருதநகர் பன்னங்கண்டி வட்டக்கச்சி பெரியபாலத்திற்கு அருகில் பொருண்மிய மேம்பாட்டு நிறுவன தென்னைநாற்று உற்பத்திப் பகுதியில் தென்னம் பிள்ளைகளை நேரடியாகத் தொடர்பு கொண்டோ அல்லது கிளிநொச்சி பொருண்மிய மேம்பாட்டு நிறுவன மாவட்ட செயலகத்தில் தொடர்பு கொண்டோ பெற்றுக்கொள்ளலாம். (6127)

### மணமகன் தேவை

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த செவ்வாய்க்குற்றமுடைய தனியார் நிறுவனம் ஒன்றில் பணிபுரியும் 33 வயது நிரம்பிய தமது புதல்விக்கு பெற்றோர் தகுந்த வரனைத் தேடுகின்றனர். தபால் மூலம் தொடர்பு கொள்ள விளம்பர இலக்கம் 6128, மே/பா ஈழநாதம், கிளிநொச்சி, தொலை பேசியில் தொடர்பு கொள்ள கா.பாஸ்கரன் T.P (077 6653323) (6128)

### காணி விற்பனைக்குண்டு

புதுக்குடியிருப்பு கைவேலியில் 02 ஏக்கர் உறுதிக் காணி தென்னை பயிரிடப்பட்ட நிலையில் விற்பனைக் குண்டு. தொடர்புகளுக்கு: சின்னராசா (தலைவர்) கைவேலி. (6125)

### தவறிவிட்டது

தியேட்டரடி சங்கானையைச் சேர்ந்த பரமசிவம் கமலா என்பவரது அடையாள அட்டை 635301490V 06.05.2005 அன்று கிளிநொச்சிக்கும் முகமாலைக்கும் இடையில் தவறிவிட்டது. இதனைக் கண்டெடுத்தவர்கள் கீழ்க்காணும் தொலைபேசி இலக்கத்துடன் [illegible] கேட்டுக் கொள்கின்றேன் (தொ.இல:-077-6102527) (5924)

### திருக்கேதீஸ்வரத்தில் இன்று கொடியேற்றம்

திருக்கேதீஸ்வர ஆலய வருடாந்த மகோற்சவம் இன்று கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து பத்து நாட்கள் இடம் பெறும்.

எதிர்வரும் 22 ஆம் திகதி பஞ்சரத பவனியும் மறுதினம் பாலாவி திருக்குளத்தில் தீர்த்த உற்சவமும் நடைபெறும். (செ)

---

அமரர் இராஜலட்சுமி சந்திரபாலன்

## அவர்களின் இறப்பு தமிழுக்கோர் இழப்பு

மண்ணில் 14 - 04 - 1947



விண்ணில் 11 - 05 - 2005

தமிழின் இனிமையை தானுமுணர்ந்து
தக்காருக்கும் கொடுத்த தேவதையின் இழப்பு
வலயத்தை துன்பத்தில் மூழ்க வைத்துள்ளது.
அன்னாரின் சேவைகள் வலயத்தில் என்றும் நிமிர்ந்திருக்கும்.
அமரர் இழப்பினால் துவழும் அவர் பிள்ளைகள்,
மருமக்கள், உறவினருக்கு அனுதாபங்கள்.

அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

வலயக் கல்விப் பணிப்பாளர்,
உத்தியோகத்தர்கள், ஊழியர்கள்,
வலயக் கல்வி அலுவலகம்,
முல்லைத்தீவு.

(சி.11890)

---

## சாவு அறிவித்தல்

### தங்கவேல் வரதலக்சுமி

வல்வெட்டித்துறை அம்மன்கோயிலடியைப் பிறப்பிடமாகவும், அன்புத்திட்டம், 1ஆம் வட்டாரம் புதுக்குடியிருப்பை வசிப்பிடமாகவும் கொண்ட தங்கவேல் வரதலக்சுமி 12-05-2005இல் காலமானார். அன்னார் தணிகாசலம் தங்கவேலின் அன்பு மனைவியும், விஜயகுமார் (சுவிஸ்), விஜயகுமாரி (வரதலக்சுமி உணவகம்), ரஞ்சனகுமாரி (இந்தியா), விஜயலட்சுமி, ராஜ்குமார் (லண்டன்), உதயகுமார் ஆகியோரின் பாசமிகு தாயாரும் ஆவார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் 15-05-2005 நாளை (ஞாயிற்றுக்கிழமை) மாலை 4.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் புதுக்குடியிருப்பு இந்து மயானத் தில் தகனம் செய்யப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
சி. தில்லையம்பதி,
ந. பாலச்சந்திரன்,
(மருமக்கள்)

(6153)

---

முு/மல்லாவி மத்திய கல்லூரியின்

பழைய மாணவர் சங்க

## வருடாந்த பொதுக்கூட்டம்

கல்லூரியின் பழைய மாணவர் சங்கப் பொதுக்கூட்டம் எதிர்வரும் 25.05.2005 பி.பகல் 3.00 மணிக்கு மயில்வாகன மண்டபத்தில் நடைபெறும். புதிய நிர்வாக தெரிவும் இடம் பெறவுள்ளது. சகல கல்லூரி பழைய மாணவர்களையும் அன்புடன் அழைக்கின்றோம்.

*தலைவர்*
*பழைய மாணவர் சங்கம்*

(.4150)

---

சிவமயம்

## முதலாம் ஆண்டு நினைவு

அன்னை மடியில் 20 . 08 . 1943



ஆண்டவன் அணைப்பில் 14 . 05 . 2004

அமரர்

### திரு. தருமலிங்கம் சந்திரா குமாரலிங்கம்

*சிந்தனையை சிரமேற்று சிறப்புடன் வாழ்க்கையிலே! ஒளியாக என்றிருப்பீர் -என நினைக்கையிலே கொடிய*

*காலனவன் உங்கள் உயிரைப் பறித்துவிட்டான் ஓர் ஆண்டென்ன... ஓராயிரம் ஆண்டானாலும் உங்களை மறவோம்.*

தகவல்:-
குடும்பத்தினர்

(6133)

---

## வன்னி தொழில்நுட்பவியல் நிறுவகம் Vanni Institute of Technology

# Vanni Vision '05

### கணினி உயர் தொழில்நுட்பக் கண்காட்சி

கிளிநொச்சி மாநகரில் அமைந்துள்ள உயர்தொழில்நுட்ப நிறுவகமான 'வன்னிரெக்' இலவச கணினி செயல்முறைக் கண்காட்சியொன்றை நடாத்துகின்றது. இக் கண்காட்சியில் கணினி மென்பொருள், வன்பொருள் மற்றும் இலத்திரனியல் பிரயோகங்களை செயன்முறை விளக்கங்களுடன் கண்டு பயன்பெற வருமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

காலம் :- மே 18,19,20 - 2005
காட்சிநேரம் :- காலை 9.30 – 12.30 மாலை 1.30 – 5.30
இடம் :- வன்னி தொழில்நுட்பவியல் நிறுவகம், கிளிநொச்சி

பதிவாளர்
வன்னிதொழில்நுட்பவியல் நிறுவகம்
கிளிநொச்சி

TP 021 228 5876
Fax 021 228 5875
Email registrar@vanni.org
URL www.vanni.org

Vanni Tech
Vanni Institute of Technology

(சி.11888)

# அமெரிக்க சனாதிபதியின் பரிந்துரை


# செனட் பிரதிநிதிகள் சபை நிராகரிப்பு

(வோஷிங்டன்)

**ஐக்கிய நாடுகள் சபைக்கான அமெரிக்கத் தூதரக சனாதிபதி ஜோர்ஜ் டபிள்யூ புஷ்சால் பரிந்துரை செய்யப்பட்டவரை அமெரிக்க செனட் சபைப் பிரதிநிதிகள் ஏற்க மறுத்துள்ளனர்.**

ஐக்கிய நாடுகள் சபைக்கான அமெரிக்கத் தூதராக ஜோன் போல்டனை சனாதிபதி ஜோர்ஜ் டபிள்யூ புஷ் பரிந்துரை செய்திருந்தார். எனினும் நேற்று முன்தினம் கூடிய செனட் பிரதிநிதிகள் சபை இது பிழையான பரிந்துரை எனத் தெரிவித்துள்ளது.

ஜோன்போல்டன் ஆயுதக் கட்டுப்பாட்டுத் துறையில் பணியாற்றிய வராவார். அதன்போது அவரின் முகாமைத்துவம் விரும்பத்தக்கதாக அமைந்திருக்கவில்லை என செனட் சபை தெரிவித்துள்ளது. செனட் சபையின் இந்த நிலைப்பாடு அமெரிக்க



சனாதிபதி நகர்வில் பின்னடைவாகும் என விமர்சிக்கப்படுகிறது.

# அமெரிக்காவுக்கு எதிராகக் கலவரம்

# ஆப்கானில் நால்வர் பலி; பலர் காயம்

(காபூல்)

ஆப்கானிஸ்தானில் அமெரிக்காவுக்கு எதிராக நடந்த கலவரத்தில் நான்கு பேர் பலியாகியுள்ளனர். இதன்போது ஜலாலாபாத்தில் அரச அலுவலகங்களுக்குத் தீ வைக்கப்பட்டது. கடைகள் கொள்ளையடிக்கப்பட்டன. ஐ.நா கட்டடங்கள், தூதரகங்கள் ஆகியவையும் தாக்கப்பட்டன.

பொலிசார் கலவரக்காரர்களை விரட்டி அடிப்பதற்காக துப்பாக்கித் தாக்குதல் நடத்தியதிலேயே நான்கு பேர் கொல்லப்பட்டனர். இதன்போது 52 பேர் காயமடைந்தனர்.

லக்மான் மாநிலத்தில் ஆயிரம் மாணவர்கள் ஆர்ப்பாட்டம் செய்தனர். கோஸ்ட் நகரில் போராட்டக்காரர்கள் புஷ்சின் உருவப்படத்தையும், அமெரிக்க தேசியக் கொடியையும் தீ வைத்துக் கொளுத்தினர். அமெரிக்கா மன்னிப்புக் கேட்க வேண்டும் என்றும் போராட்டக்காரர்கள் குரல் எழுப்பினர்.

கியூபாவில் குவாண்டனமோ என்ற இடத்திலுள்ள கடற்படை முகாம் சிறையில் முஸ்லிம்களின் புனித நூலான திருக்குர்ரான் அவமதிக்கப்பட்டதாக வெளியான செய்தியைத் தொடர்ந்து இந்தக் கலவரம் நடந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

# கார்க் குண்டுவெடிப்பு, துப்பாக்கிச்சூடு

# ஈராக்கில் ஒரு வாரத்தில் 400 பேர் பலி

(பாக்தாத்)

ஈராக்கில் தீவிரவாதிகளின் கார்க்குண்டுத் தாக்குதல் கடந்த சில நாட்களாக அதிகரித்து வரும் நிலையில் நேற்று முன்தினம் நடத்தப்பட்ட கார்க்குண்டுத் தாக்குதலில் 27 பேர் பலியாகியுள்ளனர்.

ஏற்கனவே கடந்த புதனன்று பாக்தாத், திக்ரித் உட்பட பல்வேறு நகரங்களில் நடத்திய தற்கொலை படைத்தாக்குதலில் 90 பேர் பலியானார்கள். சந்தை, பொலிஸ் நிலையம் ஆகியவை தாக்குதலில் சேதமடைந்தன. அமெரிக்க இராணுவ வாகனங்களும் குண்டு வீசித்தகர்க்கப்பட்டன.

இது இவ்வாறிருக்க நேற்று முன்தினம் தீவிரவாதிகளின் கார்க்குண்டுத் தாக்குதல் நீடித்தது. பாக்தாத்திலுள்ள ஒரு சந்தையில் தீவிரவாதிகள் குண்டு வீசித்தாக்குதல் நடத்தினார்கள். இதில் பொதுமக்கள் உட்பட 21 பேர் பலியானார்கள்.

இதேபோல் ரோந்து சுற்றி வந்த அமெரிக்க இராணுவ வாகனம் மீதும் அதிரடித் தாக்குதல் நடைபெற்றது. இதில் இராணுவ அதிகாரி உட்பட ஆறு அமெரிக்க இராணுவத்தினர் பலியானார்கள்.

பாக்தாத்திலுள்ள ஒரு சினிமா திரையரங்கு மீதும் தீவிரவாதிகள் தாக்குதல் நடத்தி தகர்த்தனர்.

கடந்த ஒரே வாரத்தில் தீவிரவாதிகளின் தாக்குதலில் 400 பேர் உயிரிழந்துள்ளனர். கிர்குக் நகரில் நேற்று இரண்டு இடங்களில் நடந்த குண்டு வெடிப்பில் இரண்டு பேர் கொல்லப்பட்டனர்.

# தீவிரவாதியை ஒப்படைக்க முடியாது

# அமெரிக்காவின் கோரிக்கை பாக். நிராகரிப்பு

பாகிஸ்தானில் இராணுவத்தினரால் கைது செய்யப்பட்ட அல் ஹைய்தா இயக்கத்தைச் சேர்ந்த தீவிரவாதி அபுபராஜ் அல்லிபி என்பவரை அமெரிக்காவிடம் ஒப்படைக்க முடியாதென்று பாகிஸ்தான் தெரிவித்துள்ளது.

பிடிபட்ட அல்லிபி அல் ஹைய்தா இயக்கத்தின் மூன்றவாது தலைவன் பாகிஸ்தான் அதிபர் முஷரப்பைக் கொல்ல .இரண்டு தடவை முயற்சி செய்ததாகக் குற்றம் சாட்டப்பட்டுள்ளார்.

பிடிபட்ட அல்லியை தங்களிடம் ஒப்படைக்கும்படி அமெரிக்கா பாகிஸ்தானை வற்புறுத்தியது. இவரிடம் விசாரணை நடத்தியதால் அல்ஹைய்தா தலைவன் பின்லேடன் எங்கே இருக்கிறான் என்ற விபரமும் அவர்களது அடுத்த கட்ட சதித்திட்டங்கள் பற்றிய விபரம் தெரிய வருமென அமெரிக்கா நம்புகிறது.

ஆனால் அமெரிக்காவின் கோரிக்கையை பாகிஸ்தான் நிராகரித்து விட்டது. இது பற்றி பாகிஸ்தான் வெளியுறவு அமைச்சர் முகமது கசூரி கூறும்போது, தீவிரவாதி அல்லிபி அதிபர் முஷரப்பைக் கொல்ல முயன்றது உட்பட பல்வேறு வழக்குகளில் சம்பந்தப்பட்டவர் அவரை இங்கு வைத்துத்தான் விசாரிக்க வேண்டும் என்று தெரிவித்தார். இதனால் இவ் விடயத்தில் அமெரிக்காவுக்கும், பாகிஸ்தானுக்கும் இடையே கருத்து வேறுபாடு ஏற்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது.



உஸ்பெஸ்கிஸ்தானின் அன்டிஜான் நகரில் முஸ்லிம் தீவிரவாதிகளின் தாக்குதலில் எரிந்த நிலையில் காணப்படும் காரின் முன்னால் குழுமியிருக்கும் மக்கள் (முஸ்லிம் தீவிரவாதிகளுக்கும், பாதுகாப்புப் படையினருக்குமிடையில் நடந்த சண்டையில் ஒன்பது பேர் பலியாகியும், 34 பேர்காயமடைந்துள்ளனர்.)

## டெங்குக் காய்ச்சல் தீவிரம் தாய்லாந்தில் 12 பேர் உயிரிழப்பு

(பாங்கொக்)

தாய்லாந்தில் டெங்குக் காய்ச்சல் காரணமாக இவ் ஆண்டு 12 பேர் பலியாகியுள்ளனர்.

தாய்லாந்தில் தொடர்ந்து பெய்து வந்த மழையால் மழை நீர் தேங்கி நுளம்புகள் பெருகியதே காரணம் எனத் தெரிவிக்கப்படுகிறது. இது வரை ஏழாயிரத்து 200 பேர் இந்தக் காய்ச்சலால் பாதிக்கப்பட்டுள்ளனர். 12 பேர் சிகிச்சை பலனின்றி இறந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

காய்ச்சல், தலைவலி, தசை மற்றும் மூட்டு வலியை ஏற்படுத்தும் இந்தக் காய்ச்சலால் 2002ஆம் ஆண்டு 176 பேர் பலியாகினர். ஒரு இலட்சத்து 15 ஆயிரம் பேர் பாதிக்கப்பட்டனர். டெங்குக் காய்ச்சலைத் தடுக்க தாய்லாந்து அரசு பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

# ஹெயிட்டியில் பெரு வெள்ளம்

# ஆயிரக்கணக்கானோர் நிர்க்கதி

ஹெயிட்டியில் வார இறுதியில் ஏற்பட்ட பெரு வெள்ளத்தால் 11 பேர் பலியானதுடன் ஆயிரக்கணக்கான மக்கள் வீடுகளை இழந்து நிர்க்கதியாகியுள்ளனர்.

சுழல் காற்றுக் காலம் ஏற்படுவதற்கு முன்னர் அவர்களது சொந்த வீடுகளுக்குத் திரும்புவதற்கான நிதியுதவிகள்ள வழங்குவதற்கு முன்வருமாறு ச்ர்வதேச உதவி வழங்கும் நிறுவனங்களை ஹெயிட்டி கோரியுள்ளது.

இந்தப் பகுதிகளிலிருந்து மக்களை மாற்று இடங்களுக்கு அனுப்பாது விட்டால் மண்சரிவு மற்றும் வெள்ளத்தினால் மேலும் பலர் இறக்கக்கூடும் என ஹெயிட்டியின் உள்துறையமைச்சர் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் கூறுகையில்; இன்னும் ஒரு பாரிய அனர்த்தமொன்று எந்த நேரத்தில் ஏற்படுமென்று கூறமுடியாது எனவே இப்பகுதியிலுள்ள மக்களை வேறு இடங்களுக்கு மாற்ற வேண்டும் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.



"மிஸ்யுனிவர்ஸ்" அழகிப் போட்டி தாய்லாந்தின் பாங்கொக் நகரில் இம் மாதம் 31 ஆம் திகதி நடக்கிறது. இதில் கலந்து கொள்ள பல்வேறு நாடுகளைச்சேர்ந்த அழகிகள் பாங்கொக் சென்றுள்ளனர் அங்கு தங்கி யிருக்கும் கயானா, ஜேர்மனி, அல்பேனியா, ஹங்கேரி, மெக்சிக்கோ, குரோஷியா அழகிகள் யானை மீது அமர்ந்து சவாரி செய்யும் காட்சி.

# இஸ்ரேல்-பலஸ்தீனப் பிரச்சினைக்கு சமாதான முறையில் தீர்வு காண்க

## அப்பாஸை வலியுறுத்துகிறார் பிரேசில் சனாதிபதி

பிரேசில் சனாதிபதி லூயிஸ் ஜினசியோ லூடா இஸ்ரேலுடனான பிரச்சினைக்கு சமாதான முறையில் தீர்வு காணுமாறு பலஸ்தீன சனாதிபதி முஹமட் அப்பாஸை வலியுறுத்தியுள்ளார்.

பிரேசிலின் தலைநகரில் அண்மையில் இடம்பெற்ற தென்னமெரிக்க மற்றும் அமெரிக்க அரேபிய உச்சி மாநாட்டிற்கு முதல் நாள் இடம் பெற்ற கூட்டத்தில் இரு தலைவர்களும் சந்தித்தபோது இந்தக் கருத்துத் தெரிவிக்கப்பட்டது.

இஸ்ரேலியர்களின் கட்டுப்பாட்டிலுள்ள மூன்று மேற்குக் கரை நகரங்களை ஒப்படைப்பதில் கால தாமதம் ஏற்பட்டிருப்பதால் காஸாவிலிருந்து துருப்பினர் வாபஸ் பெறும் நடவடிக்கைகள் எதிர்வரும் ஒகஸ்ட் மாதம் நடுப்பகுதிவரை பின் தள்ளியிருப்பதாக இஸ்ரேலியப் பிரதமர் ஏரியல் ஷரோன் தெரிவித்துள்ளார்.

100 பலஸ்தீனியக் கைதிகளை விடுதலை செய்வதென்று தெரிவித்த ஷரோன் அந்நடவடிக்கை தற்போது தாமதமடைந்து வருவதாகவும் தெரிவித்துள்ளார்.




பாக்தாத்தில் நேற்று நடைபெற்ற குண்டுத் தாக்குதலின் பின்னர் பாதையைச் சீர் செய்யும் பணியில் ஈடுபட்டுள்ள அமெரிக்கப் படையினர்.


# உலக மேயர்கள் மாநாடு ஜூன்மாதம் அமெரிக்காவில்

உலக மேயர்கள் மாநாடு அமெரிக்காவில் சான்பிரான்சிஸ் கோவில் அடுத்த மாதம் முதலாம் திகதி நடைபெறவுள்ளது. அதில் இந்தியா, சீனா, பிரேசில், இங்கிலாந்து உட்பட 60 நாடுகளில் உள்ள மேயர்கள் கலந்து கொள்கிறார்கள். இந்த மாநாட்டில், சுற்றுச்சூழலைப் பாதுகாப்பதற்கான ஒப்பந்தத்தில் மேயர்கள் கையெழுத்திடுகிறார்கள்.

# பின்தங்கிய கிராமங்களின் அபிவிருத்தி வேலைத்திட்ட செயற்பாடு குறித்து ஆராய்வு

(அலுவலக செய்தியாளர்)

**சமூகபொருளாதாரரீதியாக மிகவும் பின்தங்கிய கிராமங்களை மீளப் புனரமைத்து அபிவிருத்தி வேலைத்திட்டச் செயற்பாட்டு நடவடிக்கைகளை மேற்கொள்வது தொடர்பான கருத்தமர்வொன்று நேற்று முன்தினம் கிளிநொச்சியில் இடம்பெற்றுள்ளது.**




தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் சமூக ஆற்றுப்படுத்தல் பிரிவினரால் ஏற்பாடுசெய்யப்பட்ட இக்கருத்தமர் வானது, இ.ம. செல்வராஜா அவர்கள் தலைமையில் தமிழர் புனர்வாழ் வுக்கழக நடுவப்பணியகக் கேட்போர் கூடத்தில் நேற்று முன்தினம் காலை 9.30 மணியளவில் இடம்பெற்றது.

இதில் கிளிநொச்சி மாவட்டத் திலுள்ள உள்ளூர் அரசசார்பற்ற நிறுவனங்களைச் சார்ந்த பிரதிநிதி கள், சமூக ஆர்வலர்கள், தமிழர் புனர் வாழ்வுக் கழகத் தொண்டர்களெனப் பலர் கலந்துகொண்டு கருத்துப் பரிமாற்றங்களை மேற்கொண்டிருந் தனர். கிளிநொச்சி மாவட்டத்தைப் பொறுத்தவரையில் சுனாமியால் பாதிக்கப்பட்ட கிராமங்களை மட்டுமல் லாது கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள அனைத்துக்கிராமங்களினதும் சமூக பொருளாதார அபிவிருத்திக் குழுக் களினது கட்டமைப்புக்களையும், அவற்றின் செயற்பாடுகளையும் ஒருங் கிணைத்து அந்த மக்களின் முழுமை யான பங்களிப்புக்களுடன் கூடிய வேலைத்திட்டங்களை மேற்கொள்ளக் கூடிய ஒழுங்கமைப்புக்களை எவ்வாறு ஏற்படுத்துவதென்பது பற்றியும் இக் கருத்தமர்வில் ஆராயப்பட்டது. போர்ச் சூழல் காரணமாகவும், இயற்கை அனர்த்தங்கள் காரணமாகவும் குறிப் பாக வடக்குக்கிழக்குப் பிரதேசத்தில் சுனாமிப்பேரலையால் பாதிக்கப்பட்ட கிராமங்களையும், அந்தக் கிராமங் களிலிருந்து பாரிய இழப்புக்களுக்கு மத்தியில் இடம்பெயர்ந்து நலன்புரி நிலையங்களிலும், இடைத்தங்கல் முகாம்களிலும் வாழ்ந்துவரும் மக் களின் வாழ்வாதாரங்களை மீளவும் கட்டியெழுப்புவது தொடர்பான தேவைப்பகுப்பாய்வுகளை எவ்வாறு மேற்கொள்வதென்றும், அந்த மக்களின் பங்களிப்புடன் அவர்களது சமூக பொருளாதார அபிவிருத்திக் கான வேலைத்திட்டச் செயற்பாடு களை எப்படி முன்னெடுப்பதென்றும், எவ்வாறான அணுகுமுறைகளைக் கையாளவேண்டுமென்றும் கருத்துப் பரிமாற்றங்கள் மேற்கொள்ளப்பட்டன.

இக் கருத்தமர்வில் தமிழர் புனர் வாழ்வுக்கழக நிறைவேற்றுப் பணிப் பாளர் கே. பி. றெஜி, தமிழர் புனர் வாழ்வுக் கழகத் திட்டமிடல் பணிப் பாளர் லோறன்ஸ் கிறிஸ்ரி, கிளி நொச்சி மாவட்ட அரச சார்பற்ற நிறு வனங்களின் இணையத்தலைவர் கணேசபிள்ளை, சமூக ஆற்றுப்படுத் தல் ஆலோசகர் ரஜனி இக்பால் ஆகியோர் கலந்துகொண்டு கருத் துரைகளை வழங்கியிருந்தமை குறிப் பிடத்தக்கது. (கு)



மட்டு-அம்பாறை மாவட்ட சிறப்புத்தளபதி கேணல் பானு நேற்றுக் காலை விசேட உலங்குவானூர்தி மூலம் கிளிநொச்சியை வந்தடைந்தார். (படம்-பிரதீபன்)

## தற்காலிக முன்பள்ளி திறப்பு

(வட்டக்கச்சி)

வட்டக்கச்சி பெரியகுளம் பகுதியில் தற்காலிக முன்பள்ளி ஒன்று கடந்த திங்கட்கிழமை திறந்துவைக்கப்பட்டுள்ளது.

கரைச்சி வடக்கு அபிவிருத்தி நிறுவன இணைப்பாளர் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் மங்கலவிளக்கினை பெரியகுள அபிவிருத்திச்சங்கச் செயலாளரும், கிராமசேவையாளரும் ஏற்றிவைக்க, தேசியக்கொடியினை வட்டக்கச்சி அரசியல்துறை மகளிர்பொறுப்பாளர் ஆரணியும் ஏற்றிவைத்தார்.

தொடர்ந்து மாவீரர் பாஸ்கரனின் திருவுருவப்படத்திற்கு ஈகச்சுடரினை அவரின் பெற்றோர் ஏற்றிவைத்தனர்.

அதனைத் தொடர்ந்து வட்டக்கச்சி பிரதேச அரசியல் துறைப்பொறுப்பாளர் சுடர் முன்பள்ளி நாடாவை வெட்டித்திறந்து வைத்தார். கருத்துரைகளை வட்டக்கச்சி அரசியல்துறைப் பொறுப்பாளரும், கிளி.மாவட்ட முன்பள்ளி இணைப்பாளரும் வழங்கினர். (12)

## பாம்பு தீண்டி வயோதிபர் மரணம்

(வட்டக்கச்சி)

வட்டக்கச்சி மாயவனூர்ப்பகுதியில் பாம்பு தீண்டி வயோதிபர் ஒருவர் பரிதாபகரமாக உயிரிழந்தார். மாயவனூரைச் சேர்ந்த ஆறுமுகம் கதிரவேலு (வயது-74) என்பவரே இவ்வாறு உயிரிழந்தவராவார். மேற்படி நபர் வீட்டுத்தோட்டத்தில் வேலையில் ஈடுபட்டுக்கொண்டிருந்த வேளை பாம்புதீண்டியுள்ளது. இதையடுத்து அயலவரின் உதவியுடன் கிளி.மாவட்ட வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டு சிகிச்சை பலனளிக்காது பரிதாபகரமாக உயிரிழந்துள்ளார்.(12)

## வட்டக்கச்சி மகாவித்தியாலயத்தில் விஞ்ஞான ஆய்வு கூடம் திறப்பு

(வட்டக்கச்சி)

வட்டக்கச்சி மகாவித்தியாலயத்தில் அமரர் நாகலிங்கம் சரவணமுத்து ஞாபகார்த்த விஞ்ஞான ஆய்வு கூடம் திறக்கப்பட்டுள்ளது.

17இலட்சம் ரூபா செலவில் அமைக்கப்பட்ட இக்கட்டடத்திறப்பு விழாவானது நேற்று முன்தினம் காலை 9.00 மணியளவில் இடம்பெற்றுள்ளது. இந்நிகழ்வில் கட்சன்வீதிச் சந்திக்கு அண்மையிலிருந்து பிரதான நுழைவாயில் ஊடாக பாண்ட்வாத்தியத்துடன் விருந்தினர்கள் அழைத்துவரப்பட்டனர்.

முதல் நிகழ்வாக மங்கல விளக்கினை கிளிநொச்சி வலயக்கல்விப் பணிப்பாளர் குருகுலராசாவும், கரைச்சிப்பிரதேச விசேட ஆணையாளர் பொன்.நித்தியானந்தமும், தேசியக்கொடியினை போராளி வழுதியும், பாடசாலைக்கொடியினை பாடசாலை முதல்வர் இ.சந்திரராஜாவும் ஏற்றிவைத்தனர்.

அதனைத் தொடர்ந்து அமரர் நாகலிங்கம் சரவணமுத்து அவர்களின் மகன் ஆனந்தராசா புதிய ஆய்வுகூட கட்டடத்திற்கான பெயர்ப்பலகையினை திரைநீக்கம் செய்து வைத்ததுடன், நுழைவாயிலின் நாடாவினையும் வெட்டி ஆய்வுகூடத்தைத் திறந்துவைத்தார். அத்தோடு பாடசாலையின் முதன்மை மண்டபத்தில் நிகழ்வுகள் பாடசாலை முதல்வர் தலைமையில் இடம்பெற்றதுடன். பாடசாலை மாணவிகளின் வரவேற்பு நடனமும் இடம்பெற்றது. ஆசியுரையினை வட்டக்கச்சி சூசையப்பர் ஆலய பங்குத்தந்தை அகஸ்ரீன் அடிகளார் வழங்கினார். தலைமை உரையினைத் தொடர்ந்து கருத்துரைகளை கிளிநொச்சி வலயக்கல்விப்பணிப்பாளர் குருகுலராசாவும், கல்விக்கழகப் பொறுப்பாளரும், அமரர் சரவணமுத்துவின் மகன் ஆனந்தராசாவும், கண்டாவளை மகாவித்தியாலயத்தின் முதல்வரும், வட்டக்கச்சி மகாவித்தியாலயத்தின் பழையமாணவருமான சிறிதரன், வட்டக்கச்சிப்பிரதேச அரசியல் துறைப் பொறுப்பாளர் சுடர் ஆகியோர் நிகழ்த்தினர். இதனைத் தொடர்ந்து பாடசாலை மாணவர்களின் கலைநிகழ்வுகளும் இடம் பெற்றமை குறிப்பிடத்தக்கது.(12)

## கிணற்றிலிருந்து பெருமளவான வெடிபொருட்கள் மீட்பு

(புளியங்குளம்)

புளியங்குளம் ஆயப்பகுதி ஊழியர் கள் விடுதிக்கிணற்றலிருந்து 500 இற்கும் மேற்பட்ட வெடிபொருட்கள் மீட்கப்பட்டுள்ளன.

நேற்று முன்தினம் ஆயப்பகுதி விடுதிக்கிணற்று நீர் இறைத்த வேளையிலேயே மேற்படி வெடிபொருட் கள் தென்பட்டுள்ளன.

இவ்வெடிபொருட்கள் ஒரு உழவு இயந்திரப்பெட்டியுடன் காணப்பட்டுள் ளது. அதனையடுத்து அப்பகுதி கண்ணிவெடி அகற்றும் பிரிவினரின் உதவியுடன் 500இற்கும் மேற்பட்ட எறிகணைகள் மற்றும் சிறியகைக் குண்டுகளும் மேலும் பல வெடிபொருட் களும் மீட்கப்பட்டுள்ளன .(கு)

## முன்னாள் கல்விப்பணிப்பாளருக்கு புதுக்குடியிருப்பில் சேவைநலன் பாராட்டு

### -கார் ஒன்றும் அன்பளிப்பு

(புதுக்குடியிருப்பு)

முன்னாள் முல்லை.வலயக் கல்விப் பணிப்பாளரும், தற்போதைய கிளிநொச்சி வலயக்கல்விப் பணிப் பாளருமான த.குருகுலராசாவின் சேவையைப் பாராட்டி கடந்த புதன் கிழமை புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரியில் விழா ஒன்று இடம்பெற் றது.



காலை புதுக்குடியிருப்பு சிறிசுப்பிரமணிய வித்தியா சாலையில் ஒன்று கூடிய ஆசிரியர்கள், அதிபர்கள் மற்றும் திணைக்கள அதிகாரிகள், ஊழி யர்கள் அவரை புதுக்குடியிருப்பு மத் திய கல்லூரி மாணவிகளின் பாண்ட் வாத்திய அணிவகுப்புடன் ஊர்வல மாக புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி வளாகத்திற்கு அழைத்து வந்தனர். அங்கு முல்லை வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் ச.நாகரத்தினம் தலைமையில் நிகழ்வு இடம் பெற்றது.

வரவேற்புரையை ஆசிரிய ஆலோசகர் திருமதி.லி.இரகுநாதன் நிகழ்த்தினார். தொடர்ந்து வற்றாப் பளை ம.வி. அதிபர் இரங்கநாதன், புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி அதிபர் பி.கே சிவலிங்கம், கரைதுறைப பற்று கோட்டக்கல்வி அதிகாரி அன் ரனி ஜெயநாதன், முல்லை. மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் செ.முகுந்தன், முல்லை. மாவட்ட கல்விக்கழகப் பொறுப்பாளர் அறிவன பன் உட்பட பலர் பாராட்டு உரை யாற்றினர். தொடர்ந்து முல்லை. வலய கல்விப்புலத்தினரால் கார் ஒன்று அன்பளிப்பாக வழங்கி கௌர விக்கப்பட்டது.

இச்சேவை நலன் பாராட்டு விழா வினை முல்லை. வலயக் கல்விப் புலத்தினர் ஏற்பாடு செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது (08)

### சான்றிதழ் வழங்கல்

மேஜர் முரளி கணினிப்பயிற்சி நிலையத்தில் இதுவரைகாலமும் கல்விகற்ற மாணவர்களுக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வு நாளை இடம்பெறவுள்ளது.

மேற்படி நிகழ்வு காலை 10.00 மணிக்கு இடம்பெறவுள்ளதால் இந் நிகழ்வில் அனைத்து மாணவர்களை யும் கலந்துகொள்ளுமாறு நிர்வாகத் தினர் வேண்டுகின்றனர். (24)

### கலந்துரையாடல்

(அலுவலக செய்தியாளர்)

கரைச்சிக்கோட்டப் பாடசாலை களுக்கான கல்வி அபிவிருத்தி சம் பந்தமான முக்கிய கலந்துரையாடல் இன்று காலை 10.00 மணியளவில் கிளிநொச்சி மகாவித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

இந்தப் பாடசாலை அபிவிருத்திச சங்கக் கலந்துரையாடலில் பாடசாலை அபிவிருத்திச்சங்கச் செயலாளர் அல்லது உறுப்பினர் ஒருவருடன் அதிபரும் தவறாது சமுகம் தரும்படி கரைச்சிக் கோட்டக்கல்வி அதிகாரி திருமதி.இ.அரியரத்தினம் கேட்டுக் கொண்டுள்ளார். (கு)

யாழ்ப்பாணம்

# டெங்கு ஒழிப்பு வாரத்தில் அனைவரும் ஒன்றிணைக!

**பிரதி மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஆ.கேதீஸ்வரன்**

(யாழ்ப்பாணம்)

**யாழ்.குடாநாட்டில் கடைப்பிடிக்கப்படவுள்ள டெங்கு ஒழிப்புவாரத்தில் அனைவரையும் ஒன்றிணைந்து செயற்படுமாறு பிரதிமாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார்.**

யாழ்.மாவட்டத்தில் எதிர்வரும் 16ஆம் திகதிமுதல் 22ஆம் திகதி வரை டெங்கு ஒழிப்பு வாரமாகக் கடைப்பிடிக்கவுள்ளது.

பருவமழைக்குப்பின்னர் இலங்கையின் பல பாகங்களிலும் டெங்குக் காய்ச்சல் பரவ ஆரம்பித்துள்ளது.

யாழ்.மாவட்டத்தில் டெங்குக் காய்ச்சல் பரவக்கூடிய அபாய சூழ்நிலை தோன்றியுள்ளது. எனினும் யாழ்.மாவட்டத்தில் இது வரை டெங்கு நோயாளி எவரும் இனங்காணப்படவில்லை. இருந்தபோதும் எச்சரிக்கையாக இருக்கு முகமாக சகல தடுப்பு நடவடிக்கைகளையும் நாம் உடனடியாக மேற்கொள்ளாவிடின் பல உயிரிழப்புக்களைத் தவிர்க்க முடியாமல் போகலாம். ஆகையினால் டெங்குக் காய்ச்சலை உண்டு பண்ணும் நுளம்புகளை பரவிடாது தடுக்கும் நடவடிக்கைகள் மேற் கொள்ளப்படவிருக்கிறது இதற்காக பாடசாலைச் சூழல் சுத்தம், செய்யும் பெறுப்பு வலயக் கல்விப் பணிமனையினிடமும் பாடசாலை அதிபர்களிடமும் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

பொது இடங்களில் சுத்தம் பேணும் பொறுப்பு கிராம அபிவிருத்திச் சங்கங்களிடமும் உள்ளூராட்சி அதிகாரிகளிடமும் ஒப்படைக்கப்பட்டுள்ளது. மற்றும் நிறுவனங்களின் சூழல் சுத்தம் அதன் தலைவர்களிடமும், வீட்டுச் சூழல் சுத்தம் குடியிருப்பாளர்களிடமும் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

இவ்விடயத்தில் மாவட்ட சுகாதார சேவை திணைக்களம் முழுக்கவன மும் செலுத்துவதுடன் மேற்பார்வையிடும் நடவடிக்கையிலும் ஈடுபடும் பாடசாலைகள், நிறுவனங்கள் மட்டத்தில் டெங்கு ஒழிப்பு அமைப்பு அமைக்கப்படும்

இவ்வமைப்பு டெங்கு நுளம்பு அதிகரித்துக் காணப்படும் இடங்களையும் பாதிக்கப்பட்டவர்களிலும் விசேட கவனம் செலுத்துவரும். எதிர் டெங்கு ஒழிப்பு வாரத்தில் பாடசாலை கிராமமட்டத்திலான கருத்தரங்குகளும் சிரமதானமூலமாக சுத்திகரிப்பு பணிகளும் மேற்கொள்ளப்படவுள்ளன.

உள்ளூராட்சிச் சபைகள், வீதி அபிவிருத்தி அதிகாரசபை, வீதி அபிவிருத்தித் திணைக்களம், நீர்ப்பாசனத்திணைக்களம் என்பன தமது வரையறைக்குட்பட்ட பகுதிகளில் நுளம்புகள் உற்பத்தியாகக் கூடிய இடங்களை அழிப்பதில் பூரண கவனம் செலுத்தி ஒத்துழைப்பு வழங்க வேண்டும்.

இவ்வாரத்தின் முடிவில் பொது சுகாதார பரிசோதகர்கள் மாவட்டத்தின் பல பகுதிகளுக்கும் சென்று டெங்கு தடுப்பு நடவடிக்கைகளை ஆய்வு செய்வார்கள். டெங்கு ஒழிப்பு நடவடிக்கைகளுக்கு ஒத்துழைப்பு வழங்காது டெங்கு பரவுவதற்கு உடந்தையாக இருப்பவர்களுக்கெதிராக கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும். இவ்வாறு யாழ்.மாவட்ட பிரதி மாகாண சுகாதார சேவைப்பணிப்பாளர் டாக்டர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார். (சு)

# குழுமோதலில் பயன்படுத்தப்பட்டவை அரசியல் துறையினரால் மீட்பு

(தென்மராட்சி)

கச்சாய்ப்பகுதியில் கடந்த சில வாரங்களாக குழுமோதலில் ஈடுபட்டு வந்த இரு குழுக்களிடம் இருந்து கத்தி,வாள், வெடிகுண்டுகள் என்பவற்றை தென்மராட்சி கோட்ட அரசியல்துறையினர் மீட்டுள்ளனர்.

அத்துடன் இக்குழு மோதலில் ஈடுபட்டு வந்தவர்களும் இனங்காணப்பட்டு எச்சரிக்கை செய்யப்பட்டுள்ளனர். இது குறித்து கருத்துத் தெரிவித்த தென்மராட்சிக் கோட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் ஈஸ்வரன், சமூக அமைதிக்கும், மக்களின் இயல்பு வாழ்விற்கும் எதிராக குழப்பத்தை ஏற்படுத்துவோருக்கெதிராக எதிர்காலத்தில் கடும் நடவடிக்கை எடுக்கப்படுமெனத் தெரிவித்தார். (28)

# தென்மராட்சிப் பிரதேசத்தில் கணனிக் கல்வி நிலைய திறப்பு விழா

(தென்மராட்சி)

தென்மராட்சிப்பிரதேசத்தில் சர்வதேச தமிழீழ மாணவர் பேரவையின் இலவச கணனிக் கல்விநிலையத் திறப்புவிழா நாளை இடம்பெறவுள்ளது. தாமோதரம்பிள்ளை வீதி, சங்கத்தானையில் காலை 10.00 மணிக்கு சர்வதேச தமிழீழ மாணவர் பேரவையைச் சேர்ந்த வி.விஜயரூபன் தலைமையில் நிகழ்வுகள் ஆரம்பமாகும்.

இந்நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக யாழ்.பல்கலைக்கழக விஞ்ஞானபீட பேராசிரியர் க.கந்தசாமி கலந்துகொள்ளவுள்ளார். சிறப்பு விருந்தினர்களாக சாவகச்சேரி இந்துக் கல்லூரியின் முன்னாள் அதிபர் சந்திரசேகரம், யாழ்.மாவட்ட மகளிர் அரசியல் துறைப்பொறுப்பாளர் யோ.கலைவிழி, யாழ்.மாவட்ட மாணவர் அமைப்புப் பொறுப்பாளர் சி.கிருஷ்ணா ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர்.

பெயர்ப்பலகையினை சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரி பிரதி அதிபர் அருந்தவபாலன் திரைநீக்கம் செய்து வைப்பார். கணனிக் கூடத்தினை யாழ்.பல்கலைக்கழக விஞ்ஞானபீட பேராசிரியர் க.கந்தசாமி திறந்து வைக்கவுள்ளார்.

# கல்வயல் பிரதேசத்திற்கு மீண்டும் மின் விநியோகம்

(தென்மராட்சி)

கடந்த 2000ஆம் ஆண்டு இடம்பெற்ற யுத்தத்தால் கடும் அழிவுகளைச் சந்தித்த கல்வயல் பகுதிக்கான மின் விநியோக அங்குராப்பண நிகழ்வு அண்மையில் நடைபெற்றது. கல்வயல், பிள்ளையார் ஆலயத்தில் வைத்து இப்பகுதிக்கான மின் விநியோகம் சம்பிரதாய பூர்வமாகத் தொடக்கி வைக்கப்பட்டது.

இந்நிகழ்வில் சிவசிறி சிதம்பரநாத குருக்கள், சாவகச்சேரி மின் அத்தியட்சகர் வெ.சடாச்சரமூர்த்தி, தென்மராட்சி கோட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் ஈஸ்வரன், பாராளுமன்ற உறுப்பினர் நடராச ரவிராஜ் மற்றும் இப்பகுதிப் பொதுமக்கள் கலந்துகொண்டனர். (28)

# பொதுமக்கள் தாக்கப்பட்டமை படையினரின் யுத்தநிறுத்த மீறலாகும்

*-தென்மராட்சி பொதுமக்கள் பேரவை*

(தென்மராட்சி)

தென்மராட்சி கைதடிப்பகுதியில் போர் நிறுத்த கண்காணிப்புக் குழுவினர் முன்னிலையிலேயே பொது மக்கள் படையினரால் தாக்கப்பட்ட சம்பவமானது அப்பட்டமான யுத்த நிறுத்த மீறலாகுமென தென்மராட்சி பொது மக்கள் பேரவையினர் தெரிவித்துள்ளனர்.

அண்மையில் நடந்த ஹர்த்தாலினை அனுஷ்டித்த மக்களை சீண்டும் வகையில் படையினரும், பொலிசாரும் கண்ணீர்ப் புகைக்குண்டு வீச்சு, தடியடிப்பிரயோகம் என்பவற்றை நடத்தியுள்ளனர்.

அத்துடன் கைதடிப் பிரதேச அரசியல்துறைப்பணிமனை மீது கண்ணீர்ப் புகைக்குண்டுத்தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

இந் நடவடிக்கைகளானது அரச பயங்கரவாதத்தின் கோழைத்தனத்தை நிறுவி இருப்பதுடன், சமாதானம் அஸ்தமித்து வருவதை எடுத்துக் காட்டுகின்றது என தென்மராட்சி பொதுமக்கள் பேரவையினர் தெரிவித்துள்ளனர். (28)

# க.பொ.த (உ/த) மாணவர்களுக்கு இலவச வினாவிடை வகுப்புக்கள்

(யாழ்ப்பாணம்)

கல்விப் பொதுத்தராதர உயர்தரப் பரீட்சையில் இவ்வாண்டு தோற்றவுள்ள மாணவர்களுக்கு இலவச மாதிரி வினாவிடை வகுப்புக்கள் நடத்தப்படவுள்ளன.

இன்று தொடக்கம் எதிர்வரும் 17 ஆம் திகதி வரை யாழ்.பல்கலைக் கழகத்திற்கு முன்பாகவுள்ள சத்திய சாயி சேவா நிலையத்தில் காலை 9.00 மணி தொடக்கம் வகுப்புக்கள் நடத்தப்படும்.

பொருளியல், கணக்கியல், வர்த்தகம், ஆங்கிலம் ஆகிய பாடங்கள் நடத்தப்படும். இலவச மாதிரி வினாக்களும் விளக்கங்களும் இதன் போது வழங்கப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

# விவசாயிகளுக்கு அச்சுறுத்தல்


(மருதனார் மடம்)

மருதனார்மடம் சந்தையில் பொருட்களை விற்பனை செய்யச் செல்லும் விவசாயிகள் சந்தை வியாபாரிகளினால் அச்சுறுத்தல்களுக்கு உட்படுத்தப்பட்டு வருகின்றனர்.

விவசாயிகளிடம் பொருட்களை கொள்வனவுசெய்துவிட்டு பணம் கொடுக்கும் போது அதனைக் கொடுக்காது இழுத்தடிப்பதும் பின்னர் குறிப்பிட்டதொகைப் பணத்தை கழித்துக் கொண்டு கொடுப்பதும் இச்சந்தை வியாபாரிகளின் வழக்கமான நடவடிக்கையாகிவிட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது. (41)



திருத்த வேலைகள் இடம் பெறும் நாவற்குழிபாலத்தடியில்பாரம்ஏற்றி வந்த உந்துருளி ஒன்று பாதையை விட்டு ஏரியில் பாய்ந்தது. உந்துருளியில் கொண்டு வரப்பட்ட வியாபாரத்திற்கான உணவுப் பண்டங்கள் அனைத்தும் நீரில் மூழ்கின. (28)



துணுக்காய்ப்பிரதேசத்தின் கல்விளான் பகுதிக்கு செல்லும் திருப்புமுனைப் பகுதியில் அமைந்த மதகு நிலமட்டத்தில் இருந்து வருவதால் உந்துருளிகளிலும், ஈருருளிகளிலும் வருவோர் அருகிலுள்ள பள்ளத்தில் விழுந்து படுகாயமடைந்து வருகின்றனர் நில மட்டத்திலுள்ள மதகை உயர்த்திப் புனரமைக்க வேண்டும் என மக்கள் கோருகின்றனர். (24)

# தொண்டராசிரியர் நேர்முகத்தேர்வு பிற்போடப்பட்டுள்ளதாக அறிவிப்பு

(துணுக்காய்)

துணுக்காய் வலய தொண்டர் ஆசிரியர்களுக்கான நேர்முகத்தேர்வு தவிர்க்க முடியாத காரணத்தால் பிற்போடப்பட்டுள்ளதாக துணுக்காய் வலயக் கல்விப் பணிப்பாளர் ஏ.ஜே. குரூஸ் தெரிவித்துள்ளார்.

இந்த நேர்முகத்தேர்வு எதிர்வரும் 20 ஆம் 21 ஆம் திகதிகளில் நடைபெற இருந்தது.ஆயினும் இத்திகதிகளில் நேர்முகத் தேர்வு நடைபெற மாட்டாது இதற்கான திகதி பின்னர் அறிவிக்கப்படுமென அவர் மேலும் தெரிவித்தார். (24)

# முல்லையில் நடமாடும் சேவை மிக விரைவில் நடத்தப்படும்

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்டத்தில் நடத்தப்பட விருந்த நடமாடும் சேவையினை மிகவிரைவில் நடத்துவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக வடக்குக் கிழக்கு உதவிப பதிவாளர் நாயகம் ந.சதாசிவஐயர் தெரிவித்துள்ளார்.

கடந்த வாரம் முல்லைத்தீவு மாவட்டத்தில் நடத்தப்படவிருந்த இந்த நடமாடும் சேவை தவிர்க்க முடியாத காரணத்தால் பிற்போடப்பட்டது.

அடையாள அட்டைகள், சாரதி அனுமதிப்பத்திரம், திருமண அத்தாட்சிப் பத்திரம் என்பன இந்த நடமாடும் சேவை மூலம் வழங்கப்படவுள்ளன என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (சு)

# மாவில் தாக்கத்தை ஏற்படுத்தும் பழ "ஈ"


மாவில் குறிப்பிடத்தக்களவு பொருளாதார சேதத்தை மாம்பழ் ஈ ஏற்படுத்துகின்றது.

**தாக்கத்தை அடையாளம் காணல்~**

வளர்ச்சியடையும் காய் விகாரமடைதல், முதிர்ச்சியடையாத காய்கள் உதிரல், முட்டையிட ஏற்படுத்தப்படும் துளையின் ஊடாக நோய்க்காரணிகள் உட்செல்வதால் சதைப்பகுதியின் நிறம் மாறல், படிப்படியாக அழுகல் வளர்ச்சி அடையும் குடம்பிகள் சதைப் பகுதியை உணவாகக் கொள்ளல் என்பவற்றால் காய்கள் பாதிக்கப்படும். பழ ஈக்களால் பாதிக்கப்பட்ட காய்கள் கீழே விழும்வரை அல்லது அதனை வெட்டிப்பார்க்கும் வரை அதன் தாக்கத்தை அறிவது சிரமமானதாகும்.

**நிறையுடலி (தாய்ப்பருவம்) ~**

நிறையுடலியின் சிறகு விரிந்திருக்கும்போது 5~7 மில்லி மீற்றர் அளவுடையஈயாகும். கபில நிறமான இதன் உடலின் நெஞ்சுப்பகுதியில் மஞ்சள் நிறமான அடையாளத்தைக் காணலாம். வளர்ச்சியடைந்த பெண் பூச்சி 5~7 நாட்களின் பின் முட்டையிடத் தொடங்கும் பல மாதங்களுக்கு உயிர் வாழும் பெண் பூச்சிதனது வாழ்க்கைக்காலத்தில் 1000 முட்டைகள் வரை இடும். ஒரு பெண் பூச்சி. 03 தொடக்கம் ~30 முட்டைகள்வரை இடும் 50 கிலோ மீற்றர் தூரம் வரை வளர்ச்சியடைந்த பழ ஈ பறக்கக்கூடியது.




**முட்டை ~**

முற்றாக வளர்ச்சியடைந்த பெண் பூச்சி முதிர்ச்சியடைய ஆயத்த நிலையில் உள்ள காய்களை தோலிடப் படுத்தியின் மூலம் துளைத்து, அதில் முட்டையிடும். நிலவும் கால நிலைக்கு ஏற்ப ஏழு நாட்களில் இம் முட்டை பொரித்து குடம்பிகள் வெளியேறும்.



**குடம்பிப் பருவம் ~**

சிறிய குடம்பிகள் காயில் திரவ நிலையில் உள்ள இழையங்களை உணவாகக் கொள்ளும். 07~14 நாட்களில்03 உருமாற்றங்களை அடைந்து அதன் வளர்ச்சியைப் பூர்த்தி செய்யும் .



**கட்டுப்படுத்தல் ~**

**பயிர்ச்சுகாதாரம் ~**

1.தோட்டத்தை சுத்தமாக வைத்திருத்தல்.

11.மரங்களின் கீழ் விழுந்து கிடக்கும் காய்களையும், பழங்களையும் சேகரித்து 02 அடி ஆழமான குழியொன்றில் புதைத்து விடவும். இதனால் இவற்றிலிருந்துநிறையுடலி வெளியேறுவது தடைப்படும்.

111. மரத்திற்குக் கீழேயுள்ள மண்ணைப் புரட்டி விடுவதன் மூலம் கூட்டுப்புழுக்களைஏனைய பறவைகள், விலங்குகள் உணவாகக் கொள்ளும்.

**நிறையுடலி ஆண் பூச்சிக்கான பொறி ~**

01. ஆண்பூச்சிகளின் எண்ணிக்கையைக் குறைப்பதற்கு இப் பொறிகள் பயன்படுத்தப்படும்.

02.மீதைல் இயுஜினோல் (Mefhyl Eugenol) என்னும் இரசாயனப் பதார்த்தம் இதற்கு பயன்படுத்தப்படும். இதை சிற்றனெல்லா எண்ணெய், கராம்பு எண்ணெய் என்பவற்றிலிருந்து பிரித்தெடுக்கலாம்.

03.ஹெக்டயரொன்றிற்கு 08 பொறிகள் அவசியம் 02வாரங்களுக்கு ஒரு தடவை புதுப்பிக்க வேண்டும், வருடம் முழுவதும் பாராமரிக்க வேண்டும்.

04.பொறிகளைப் பயன்படுத்தி பாதிக்கப்படும் காய்களில் 20%ஐ மாத்திரமே குறைக்கலாம்.

**காய்களுக்கு உறையிடல் ~**

01.பழஈக்கள் முட்டையிட முடியாதவாறு காய்களுக்கு உறையிடலாம்.

02.காய்கள் முதிர்ச்சியடைய முன்னர் உறையிடல் வேண்டும். இதற்கு பொலித்தீன் அல்லது கடதாசிப்பையைப் பயன்படுத்தலாம். துணிகளை உறையிடுவதற்கு பயன்படுத்துவதை தவிர்க்க வேண்டும். ஏனெனில் அவை ஈரமாகும் போது காயுடன் ஒட்டிக் கொள்ளும். இதனால் முட்டையிடுவதை தடுக்க முடியாது.

03. மரம் சிறியதாக இருக்கும் போதே அதனைக் கத்தரித்து பயிற்றுவிப்பதன் மூலம் இலகுவாகப் பழங்களுக்கு உறையிடலாம்.

**இரசாயனக் கட்டுப்பாட்டு முறை~**

* பென்தியோன் (500கிராம்/லீற்றர்) செறிகுழம்பு என்ற இரசாயனத்தில் 10மில்லிலீற்றறை 10 லீற்றர் நீரில் கலந்து பெறப்படும் கரைசலுடன் 25 கிராம் சீனியைச் சேர்த்து பூக்கள் உருவாகும்போது விசிறுதல் வேண்டும்.

**இரைப்பொறிகள்~**

01.இரைக்கவர்ச்சிப் பொருட்களைப் பயன்படுத்தி அதில் பழ ஈக்களை கவர்ந்து அழிப்பதாகும்.

02. பழ ஈக்கள் கவர்ச்சிப் பதார்த்தங்கள் மூலம் கவரப்படும். எனவே இதனை மரம் முழுவதும் விசிறத் தேவையில்லை. மரத்தில் ஓரிடத்தில் மாத்திரம் கவர்ச்சிப்பதார்த்தத்தை விசிறுவதனால் பழஈக்களை இலகுவாகக் கட்டுப்படுத்தலாம்.

நா.குகானந்தன்,
விவசாயப் போதனாசிரியர்,
ஒட்டுசுட்டான்.

● ● ●

## அழிவுற்றதாகக் கருதப்பட்ட மரங்கொத்திப் பறவை



1920ஆம் ஆண்டுகளில் அழிவுற்றதாகக் கருதப்பட்ட ஒருவகை மரங்கொத்திப்பறவையினம் தற்போது உயிர்வாழ்வதாகக் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

வட அமெரிக்காவின் அறிவியல் சஞ்சிகை இதனைத்தெரி விக்கின்றது. உலகெங்கிலுமுள்ள பறவைகள் ஆய்வாளர்களின் கண்டுபிடிப்புகளை ஒப்பிட்டு நோக்கியபோது இவ்வகைப் பறவையினம் உயிர்வாழ்வது தெரியவந்திருப்பதாக சஞ்சிகை குறிப்பிடுகின்றது.

இந்த உண்மையை உறுதிப்படுத்தும் வகையில் சுமார் ஒருவருடங்களாக மேற்கொள்ளப்பட்ட தேடுதல் மூலம் எடுக்கப்பட்ட தொலைக்காட்சிப் படங்களில் இப்பறவை இனம் இருப்பது ஒளிப்பதிவு செய்யப்பட்டுள்ளது. இதனடிப்படையில் அழிவுற்றதாகக் கருதப்படும் மேலும் சில பறவையினங்கள் உயிருடன் இருக்கலாமென விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர்.

பறவைகள் பாதுகாப்புக்குப் பொறுப்பான அவிஸ்ரர்கேம்மெல் என்பவர் இந்தக் கண்டுபிடிப்பு வார்த்தைகளால் விபரிக்க முடியாதது எனத் தெரிவிக்கிறார். இவ்வகை மரங்கொத்திப்பறவைகள் சிவப்பு,வெள்ளை, கறுப்பு நிறங்கலாளனவைஎன்றும்,இவை கியூபா,தென்கிழக்கு அமெரிக்க நாடுகளில் இருப்பதாகக் கூறப்படுகிறது. மனிதன் குடியிருப்புக்களுக்காகக் காடுகளை அழித்தபோது பெரிய மரங்களில் துளையிட்டு குடியிருந்த இப்பறவையினம் அருகிவிட்டதாகவும், முற்றாக அழிந்துவிட்டதாகவும் கருதப்பட்டது. எனினும் இந்த ஆய்வு முயற்சி கடந்தவருடம் பெப்ரவரி 11ஆம் திகதி அர்கான்சஸ் நாட்டின் ஜெனிஸபாலிங் என்பவரால் மேற்கொள்ளப்பட்டது.

இவர் இதனைக் கண்டபோது அது அதற்கு முன்பு கண்டிராத பறவையாக இருந்தது. அது அவர் இருந்த இடத்துக்குச் சற்றுத் தொலைவில் வந்து ஒருமரத்தில் அமர்ந்ததாகவும் பின்னர் அவர் கோனல் பல்கலைக்கழகத்துடன் தொடர்புகொண்டு பறவைகள் தொடர்பான சஞ்சிகை பகுதிக்கு அறிவித்ததாகவும் தெரிவித்தார்.

அவர்தெரிவித்த மாதிரியே அங்கு சென்ற குழுவினருக்கு அது ஒரு புதுமையான பறவையினமாகக் காணப்பட்டதாகக் கூறியுள்ளனர். அவர்கள் அதனைத் தொலைக்காட்சியில் பதிவுசெய்துள்ளனர்.

உலகிலுள்ள பெரியமரங்கொத்தியினங்களில் ஐவரிபில் எனப்படும் இனம் 1880ஆம் ஆண்டு அழிவுற்றதாகக் கூறப்படுகிறது.

தற்போது கண்டுபிடிக்கப்பட்டிருக்கும் மரங்கொத்தியினம் மீண்டும் அழிந்துபோகாத வகையில் பாதுகாக்க அமெரிக்கா நடவடிக்கை எடுத்துவருகின்றது.

## கவிக்குயில் சரோஜினிதேவி – நாயுடு

கவிக்குயில் சரோஜினிதேவி வங்காளதேசத்தில் பிறந்தவர். இவரது தந்தையார் அகோரநாத் சட்டபோபாத்தியாயர். தாயார் வரதசுந்தரி அம்மையார். இவர் 1879 ஆம் ஆண்டு மாசி மாதம் 13ஆம் திகதி பிறந்தார். தந்தையார் ஹைதரா பாத்தில் கல்லூரி முதல்வராகக் கடமைபுரிந்தவர். அதனால் சரோஜினி தேவியையும் நன்கு படிப்பிக்க வேண்டும். என்ற எண்ணத்தில் அவரைச் சென்னை மாநிலத்தில் பரீட்சை எழுதச் செய்தார்.திறமை மிக்க மாணவியாகத் திகழ்ந்தாலும் மேற்கொண்டு படிக்க மறுத்தார்அவர்.

அதனால் மனவேதனை அடைந்த தந்தை கோபம் மிகுதியினால் சரோஜினிதேவியை ஓர் அறையில் பூட்டி பட்டினி போட்டார். தனது நன்மைக்காகாத் தானே தந்தை இப்படிச் செய்கிறார் என ஆழ்ந்து சிந்தித்த சரோஜினிதேவி தந்தை மேற்கோபம் கொள்ளாது அவரிடம் தான் செய்த தவறை மன்னிக்கும்படி வேண்டினார். மேற்கொண்டு படிப்பதாக உறுதிஅளித்தார்.

மகிழ்ந்த தந்தை லண்டன் சென்று படிக்க ஒழுங்குகள் செய்தார். ஹைதராபாத் நிசாம் என்பவர் பண உதவி புரிந்தார்.லண்டன் சென்ற இவர் பாடத்திலும் பார்க்க கவி புனைவதில் ஆர்வம் காட்டினார். அதனால் பரீட்சையைக் கோட்டை விட்டார். இருந்தும் ஆங்கில அறிவு பெற்று கவிக்குயில் என்று போற்றப்படும் அளவிற்கு கவிதைகள் எழுதினார்.

விவாகம் செய்து மனைவியை இழந்திருந்த கோபிதர் ராஜுலு நாயுடுவை விரும்பி மணம் புரிந்தார். 1898 இவர்கள் விவாகம் நடைபெற்றது. அதனால் இவர் சரோஜினி தேவிநாயுடு என்ற பெயரைப் பெற்றார். இவர்களுக்கு நான்கு குழந்தைகள் பிறந்தனர். குடும்பப் பெண்ணாக விளங்கியதோடு அடிமைப் பட்டுக்கிடந்த இந்தியாவை விடுவிக்கவேண்டும் என்ற எண்ணத்தில் புரட்சிப்பெண்ணாக எழுந்தார்.

இந்து முஸ்லிம் பெண்களின் விடுதலைக்காக போராடப் புறப்பட்டார். அவ்வேளை கோபால கிருஸ்ண கோகலே என்பவரும் இவருக்குத் துணைபுரிந்தார். இவர் தமது கவிதைத்திறனாலும், பேச்சுத் திறனாலும் பெண்களை தட்டியெழுப்பினார். அஞ்சா நெஞ்சம் கொண்ட சரோஜினிதேவி மிகுந்த ஆழுமையுடையவர் இந்திய ஆண்கள் ஆயுதங்களுட்ன் நடமாடக் கூடாது என்று பிறிட்டிஷ் அரசு தடைவிதித்த பொழுது ஆயுதம் ஏந்துவது மக்களின் பிறப்புரிமை என்று முழக்கமிட்டார். இவரது துணிவையும், பேச்சு வல்லமையும் கண்டுவியந்த சேர்ஜம்ஸ் மெஸ்டன் என்றகவர்னர் இவரை விருந்தினராக அழைத்து கௌரவப்படுத்தி அனுப்பினார்.

காந்திஜியுடன் சேர்ந்து அகிம்சைப் போராட்டத்திலும் ஈடுபட்டார். அதனால் "பாரதத்தின் கவிக்குயில்" என்றுகாந்தியால் பாராட்டுப்பெற்றார். இவர் தலைமை தாங்கிப் பலபல போராட்டங்களை வழிநடத்தினார். இவரைக்கைது செய்ய ஆங்கில அரசு நினைத்தது. அன்னிய நாட்டவன் என்னைத் தொடக்கூடாது நானாகவே கைதாகி உன்னுடன் வருகிறேன் என்று கர்ஜித்த இவரை அதிகாரி வியப்புடன் நோக்கினான். இவரைச் சிறையில் அடைத்து வைத்தான்.



ஆங்கில அரசு இவரைக் கைது செய்து சிறையில் அடைக்கும் போதெல்லாம் இவர் சிறையிலே ரோஜாச்செடிகளை நட்டு அழகு பார்ப்பார். இயற்கையிலே தனது மனதைப் பறிகொடுத்த சரோஜினி தேவியை சுதந்திரப் போராட்டத்தைப் பற்றி வெளிநாடுகளில் எடுத்துரைக்க மகாத்மாகாந்தி தேர்ந்தொடுத்தார்.இவரது திறமையினாலும், ஆளுமை யினாலும் இவர் உத்தரப்பிரதேச கவர்னராகப் பதவிவகித்தார்.

இனமதபேதமின்றி எல்லோரும் இந்தியர் என்ற மனித நேயத்துடன் செயற்பட வேண்டும் என விரும்பினார். இந்துமுஸ்லிம் ஒற்றுமைக்காகவும், தேசவிடுதலைக்காகவும் பாடுபட்ட சரோஜினிதேவி நாயுடு மூச்சுத் திணறல் நோயால் பாதிக் கப்பட்டு 1949ஆம்ஆண்டு பங்குனி மாதம் இரண்டாம் திகதி காலமானார்

இவருடைய பிறந்த நாளாகிய மாசிமாதம் 13 ஆம் திகதியில் தான் "இந்திய மகளிர் தினம்" எனக்கொண்டாடப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

– – – – –

**தமிழீழத்** தேசியத்தலைவர் அவர்களின் எண்ணக்கருவில் உருவானவற்றிற்குச் செயல்வடிவம் கொடுத்து அவற்றை நடைமுறைக்குக் கொண்டு வந்து அதில் வெற்றியைக் காண்பதில் போராளிகளும், மக்களும் வல்லமை மிக்கவர்கள். இவ்வாறு தலைவரின் எண்ணக்கருவில் உருவாக்கப்பட்டு முதலாவது சேவையினைத் திறம்பட மேற்கொண்டு அடுத்த கட்ட சேவைக்குத் தயாராகிக் கொண்டு இருக்கின்றது லெப்ரினனட் கேணல் கௌசல்யன் நடமாடும் மருத்துவ சேவை.

இந்த கௌசல்யன் நடமாடும் மருத்துவ சேவையினைத் தேசியத்தலைவரின் பணிப்பிற்கிணங்க தமிழீழ விடுதலைப்புலிகளின் மருத்துவப் பிரிவினர் உடனடியாக ஆரம்பித்து கடந்த 10 , 11 ஆம் திகதிகளில் முதலாவது நடமாடும் மருத்துவ சேவையினைப் பூநகரி வேரவில் கிராமம் உள்ளடக்கிய எட்டுக் கிராமங்களில் மிகவும் சிறப்பான முறையில் மேற்கொண்டதில் மூவாயிரத்திற்கும் மேலான மக்கள் மருத்துவ ரீதியாகப் பயனடைந்திருக்கின்றனர்.

தேசியத்தலைவர் அவர்களின் பணிப்பிற்கிணங்க ஆரம்பித்திருக்கின்றோம். அவருடைய எண்ணத் தின்படி எமது தாயகப்பகுதியில் பின்தங்கிய நிலையில் இருக்கின்ற கிராம மக்களின் சுகாதார மேம்படுத்தலை ஏற்படுத்துவது. இதற்காகத் தமிழீழ விடுதலைப்புலிகளின் மருத்துவப் பிரிவின் அனுபவம் வாய்ந்த மருத்துவர்களையும், மருத்துவப் போராளிகளையும் ஒன்றிணைத்து இந்த பின்தங்கிய கிராமங்களுக்கு சென்று அங்கு வாழும் மக்களுடைய நோய்களைக் கண்டறிந்து, அவற்றிற்கு உடனடியாகச் சிகிச்சை அளித்து, மருந்துகள் வழங்கப்படுவதும், சுகாதார விழிப்புணர்வுகளையும் ஏற்படுத்தி மக்களை மருத்துவரீதியாக எந்தவிதமான பாதிப்புக்கும் ஆகாதவாறு வழிப்படுத்துதலும் ஆகும்.

இதில் முதற்தடவையாக நாங்கள் பூநகரிப் பகுதியிலுள்ள வேரவில், கிராஞ்சி, பாலாவி, வலைப்பாடு, பொன்னாவெளி, இலவங்குடா, பிருந்தாவனம், மொட்டையன்குளம் உள்ளடக்கிய எட்டுக் கிராமங்களுக்கு இந்தச் சேவையினை வழங்கியிருக்கின்றோம்.

மருத்துவ சேவையில் உடனடியாக இனம் காணப்பட்ட குருதிச்சோகையினால் பாதிக்கப்பட்ட நோயாளர்களை அன்றையதினமே எமது நோயாளர் காவுவண்டிகள் மூலம் எமது மருத் துவ முகாம்களிற்கு அழைத்து வந்து அவர்க ளிற்கு வழங்கப்படவேண்டிய மேலதிக சிகிச்சைகளை மேற்கொண்டு வருகின்றோம்.

மேலும் இந்த நடமாடும்சேவையில் தனிய ஓர் இடத்தில் மட்டும் முகாம் அமைத்துச் சிகிச்சை வழங்கப்படவில்லை. ஒரு இடத்தில் பொதுவான எல்லாச் சிகிச்சையினையும் ஒரு தொகுதியினர் வழங்க ஏனைய மருத்துவர்களும், மருத்துவப் போராளிகளும் அங்குள்ள பாடசாலைகள், பொதுநோக்கு மண்டபங்கள் என்பவற்றில் பற்சிகிச்சை முகாம்களை அமைத்து அதன் ஊடாக மேற்கொள்ளப்பட வேண்டிய சிகிச்சைகளையும், அது தொடர்பான விழிப்புணர்வுக் கருத்துக்களையும் வழங்கியுள்ளனர். உதாரணமாகப் பல்வலி அல்லது பல்லில் சூத்தை என்றால் அதை எப்படி வராமல் தடுக்கலாம், அல்லது வந்த நோயை எவ்வாறு மாற்றலாம் என்ற "நோய் வரமுன் காப்போம்" என்ற விழிப்புணர்வுக் கருத்துக்களையும் வழங்கியுள்ளனர்.

இதில் பாடசாலை மாணவர்கள் பலருக்கு பற்பசை, பற்தூரிகை என்பவற்றையும் வழங்கி இதனைத் தொடர்ந்து பாவியுங்கள் என்றும் இதனை நீங்கள் பின்பற்றுவதன் மூலம் உங்களுடைய பல்சம்பந்தமான நோய்களைத் தடுக்கலாம் என்ற ஆலோசனைகளை வழங்கியுள்ளனர்.

நாங்கள் இந்த மருத்துவ சேவையினை இந்தக் கிராமங்களில் செய்து வருகின்றோம் என்று அறிவித்ததும் இரண்டு நாட்களும் மூவாயிரத்திற்கும் மேற்பட்ட மக்கள் எமது முகாமில் சிகிச்சை பெற்றார்கள்.

இதைத்தவிர எமது நடமாடும் மருத்துவ சேவை முகாமிற்கு வந்து சிகிச்சைபெற வசதியில்லாத மக்களின் நலனைக் கருத்

அத்துடன் இந்த இரண்டு நாள் எமது மருத்துவ சேவையில் ஈடுபட்ட மருத்துவர்களுக்கும், போராளிகளுக்கும் உரிய உணவினை அப்பகுதி மக்கள் தாமாகவே முன்வந்து தந்தார்கள்.

முக்கியமாக அந்தக் கிராமங்களில் நாங்கள் அவதானித்தது என்னவென்றால் நோய்கள் ஏற்படுகின்ற போது அது தொடர்பான எதுவித மருத்துவ ஆலோசனைகளும் பெறாமல், ஒரு நோய் ஏற்பட்டால் என்ன முறைகளைக் கையாளுதல் என்பது எல்லாம் தெரியாமல் அந்த நோய் அதிகரித்து சிறியவயதில் உயிரிழந்து போகின்ற நிலை ஏற்பட வாய்ப்பாக இருக்கின்றது. ஏனைய நகர்ப்புறங்களுடன் ஒப்பிடும் போது அங்குள்ள மக்களின் ஆயுட்காலம் குறைவாகவே காணப்படுகின்றது. இதற்கு முக்கிய காரணம் அங்கு சுகாதார விழிப்புணர்வுக் கருத்துக்களை அறியாமை மற்றும் மக்கள் ஏனைய இடத்திற்குச் சென்று சிகிச்சை பெற வசதியற்ற நிலையில் இருப்பதுமேயாகும். ஆனால் இப்போது அவர்களுக்கு அது தொடர்பான விழிப்புணர்வுக் கருத்துக்களையும், நோய்கள் வராமல் எவ்வாறு பாதுகாக்கலாம் என்பவற்றையும் எமது போராளிகளும், மருத்துவர்களும் வீடுவீடாகச் சென்று விளங்கப்படுத்தியுள்ளனர். இதன் மூலம் அக்கிராமங்களில் சுகாதாரம் தொடர்பான நிறைய மாற்றங்கள் ஏற்படும் என நம்புகின்றோம்.

இந்த கௌசல்யன் நடமாடும் மருத்துவ சேவை எமது மருத்துவப் பிரிவினால் ஆரம்பிக்கப்பட்டு நடைமுறைப்படுத்தி வருவதற்குமுன், எமது தலைவரின் பணிப்பிற்கிணங்க தியாக தீபம் திலீபன் மருத்துவசேவையின் பங்கும் அளப்பரியது. ஏனென்றால் அதுதான் மிகவும் பெரிய சேவைகளைச் செய்துள்ளது. மக்களுக்கு நிறையப் பயன்கிடைத்திருக்கின்றது.

இந்த இரண்டு சேவையும் ஒரு நோக்கம் கொண்டவைதான். ஆனால் தியாகதீபம் திலீபன் மருத்துவ சேவை குறிப்பிட்ட பிர தேசத்தில் நிலையாக நிறுவப்பட்டுள்ள மருத்துவ மனையாக இருந்து அப்பகுதி மக்களுக்கு சேவை செய்து வருகின்றது. ஆனால் இந்த கௌசல்யன் நடமாடும் மருத்துவசேவை பின்

நடமாடும் சேவையின் ஆரம்பநிகழ்வில் பொதுச்சுடர் ஏற்றும் மருத்துவப்பிரிவுப் பொறுப்பாளர் இ.றேகா




# தலைவரின் சிந்தனைக்குச் செயல்வடிவம் கொடுக்கும் லெப்.கேணல் கௌசல்யன் நடமாடும் மருத்துவசேவை

மக்களுக்கு மருத்துவரீதியிலான உதவிகள் என்ன உடனடியாகத் தேவைப்படுகின்றதோ அவற்றை அங்கு செய்து வருகின்ற தமிழீழ விடுதலைப்புலிகளின் மருத்துவப்பிரிவின் பொறுப்பாளர் றேகா அவர்களை நாம் சந்தித்து அண்மையில் மருத்துவப் பிரிவினால் உருவாக்கப்பட்ட லெப்ரினனட் கேணல் கௌசல்யன் நடமாடும் மருத்துவ சேவையின் முக்கிய நோக்கம், இந்த நடமாடும் சேவைக்கு லெப்ரினனட் கேணல் கௌசல்யனின் பெயர்வைப்பதற்குரிய காரணம் மற்றும் நடைபெற்ற முதலா

அடிப்படை வசதிகள் அற்ற நிலையில் இருந்த அந்தக் கிராமங்களிற்கு நாங்கள் போய் முதல்நாளே 1500 இற்கு மேற்பட்ட மக்களுக்குச் சிகிச்சை அளித்தோம்.

இதன்போது எமது மருத்துவப் பிரிவில் மிகவும் அனுபவம் வாய்ந்த 15 மருத்துவர்களையும், நூற்றுக்கு மேற்பட்ட மருத்துவப் போராளிகளையும் கொண்டு அதிநவீனமான மருத்துவ உபகரணங்களைப் பயன்படுத்தியும் இச்சேவையினைச் செய்துள்ளோம்.

திற்கொண்டு எமது மருத்துவர்களும், போராளிகளும், 400 இற்கும் மேற்பட்ட வீடுகளுக்குச் சென்று சுகாதாரத்தைப் பேணி நோயற்ற மக்களாக வாழ்வதற்குரிய பல ஆலோசனைகளை வழங்கினர். இவ்வாறு வீடு வீடாகச் செல்கின்ற போது இனங்காணப்படும் நோயாளர்






# தலைவரின் சிந்தனைக்குச் செயல்வடிவம் கொடுக்கும் லெப்.கேணல் கௌசல்யன் நடமாடும் மருத்துவசேவை

மக்களுக்கு மருத்துவரீதியிலான உதவிகள் என்ன உடனடியாகத் தேவைப்படுகின்றதோ அவற்றை அங்கு செய்து வருகின்ற தமிழீழ விடுதலைப்புலிகளின் மருத்துவப்பிரிவின் பொறுப்பாளர் ரேகா அவர்களை நாம் சந்தித்து அண்மையில் மருத்துவப் பிரிவினால் உருவாக்கப்பட்ட லெப்ரினன்ட் கேணல் கௌசல்யன் நடமாடும் மருத்துவ சேவையின் முக்கிய நோக்கம், இந்த நடமாடும் சேவைக்கு லெப்ரினன்ட் கேணல் கௌசல்யனின் பெயர்வைப்பதற்குரிய காரணம் மற்றும் நடைபெற்ற முதலா

**செவ்வி கண்டவர் த.குகன்**

வது மருத்துவ சேவையின் களநிலைப்பாடுகள் எவ்வாறு இருந்தது, அவற்றை எவ்வாறு நிர்வகித்தீர்கள், யாருடைய உதவிகளுடன் மேற்கொண்டீர்கள், உங்கள் சேவைக்கு மக்களுடைய ஆதரவு எவ்வாறு அமைந்தது, இந்த மருத்துவ சேவை ஊடாக நீங்கள் என்ன அனுபவங்களைப் பெற்றீர்கள், எவ்வாறான நோய்கள் அதிகமாக இனம்காணப்பட்டது, என்னென்ன முறையில் சேவைகளை இரண்டுநாளும் செய்து முடித்தீர்கள் போன்ற பல விடயங்கள் பற்றி அவரிடம் கேட்டபோது அச்சேவை பற்றி பூரணமான ஒரு விளக்கத்தைத் தந்தார். அதை உங்களுக்குத் தருகின்றோம்.

லெப்ரினன்ட் கேணல் கௌசல்யன் நடமாடும் மருத்துவ சேவையினைத் தமிழீழ



அடிப்படை வசதிகள் அற்ற நிலையில் இருந்த அந்தக் கிராமங்களிற்கு நாங்கள் போய் முதல்நாளே 1500 இற்கு மேற்பட்ட மக்களுக்குச் சிகிச்சை அளித்தோம்.

இதன்போது எமது மருத்துவப் பிரிவில் மிகவும் அனுபவம் வாய்ந்த 15 மருத்துவர்களையும், நூற்றுக்கு மேற்பட்ட மருத்துவப் போராளிகளையும் கொண்டு அதிநவீனமான மருத்துவ உபகரணங்களைப் பயன்படுத்தியும் இச்சேவையினைச் செய்துள்ளோம்.

மேலும் இந்த நடமாடும் சேவையில் பொது மருத்துவம், பற்சிகிச்சை, மகப்பேற்று பெண் ஆரோக்கியம் சம்பந்தமான மருத்துவம், அதிநவீன வசதிகொண்ட ஆய்வு கூடம், சிறிய சத்திரசிகிச்சைக் கூடம் , மருந்தகம் போன்ற பல பிரிவுகளை உள்ளடக்கி இந்தச் சேவையினைச் செய்தோம்.

உதாரணமாகப் பற்சிகிச்சை-பல்லில் வலி என்றால் உடன் பல்லை அகற்றுவதில்லை. அவற்றைத் துப்புரவு செய்தல் அல்லது அடைத்தல். இவற்றில் வெளிநாடுகளில் மேற்கொள்ளப்படுகின்ற மாதிரியான மருத்துவ முறைகளைக் கையாண்டுள்ளோம். இது போன்றுதான் அனைத்து நோய்களுக்குமுரியமாதிரி நவீன கருவிகளைப் பயன்படுத்தி உடனுக்குடன் சிகிச்சையினை வழங்கினோம்.

அத்துடன் இந்த நடமாடும் சேவையில் இனம் காணப் படும் நோயாளர்களில் தொடர்ந்தும் பராமரிக்க வேண்டிய சில நோயாளர்களை, நாங்கள் எமது மருத்துவ முகாம்களில் வைத்து அவர்களுடைய நோயினைக் குணப்படுத்து மளவிற்குச் சிகிச்சை மேற்கொள்ளக் கூடிய வசதியினையும் ஏற்படுத்தியிருக்கின்றோம்.

அத்துடன் இந்த இரண்டு நாள நாங்கள் இந்த மருத்துவ சேவையினை இந்தக் கிராமங்களில் செய்து வருகின்றோம் என்று அறிவித்ததும் இரண்டு நாட்களும் மூவாயிரத்திற்கும் மேற்பட்ட மக்கள் எமது முகாமில் சிகிச்சை பெற்றார்கள்.

இதைத்தவிர எமது நடமாடும் மருத்துவ சேவை முகாமிற்கு வந்து சிகிச்சைபெற வசதியில்லாத மக்களின் நலனைக் கருத்திற்கொண்டு எமது மருத்துவர்களும், போராளிகளும், 400 இற்கும் மேற்பட்ட வீடுகளுக்குச் சென்று சுகாதாரத்தைப் பேணி நோயற்ற மக்களாக வாழ்வதற்குரிய பல ஆலோசனைகளை வழங்கினர். இவ்வாறு வீடு வீடாகச் செல்கின்ற போது இனங்காணப்படும் நோயாளர்களை எமது நோயாளர் காவு வண்டிகளில் அழைத்து வந்து மத்தியில் அமைக்கப்பட்ட நடமாடும் சேவை முகாமில் வைத்து சிகிச்சை வழங்கி பின்னர் அவர்களுடைய வீடுகளுக்கு அனுப்பிவைத்துமுள்ளனர்.




மத்தியில் அமைக்கப்பட்ட எமது இந்த மருத்துவ முகாமிலுள்ள சிறிய சத்திர சிகிச்சை கூடத்தில் எமது அனுபவம் வாய்ந்த மருத்துவர்களால் சிறிய சத்திரசிகிச்சைகள் பலவும் இந்த இரண்டு நாட்களும் செய்யப்பட்டுள்ளது.

அத்தோடு மகப்பேற்று பெண் நோயியல் தொடர்பான மருத்துவ சேவைகளை எமது அனுபவம் வாய்ந்த மருத்துவர் ஒருவர் மேற்கொண்டு உடனடியாகச் செய்யப்பட வேண்டிய சிகிச்சையினையும் அதற்குப் பின் செய்யப்படவேண்டிய சிகிச்சைக்குரிய இடத்தினையும் அந்த நோய்களில் இருந்து விடுபட வேண்டிய வழிமுறைகள் பலவற்றையும் அவர் மிகவும் விரிவாக விளக்கியுள்ளார்.

அத்துடன் கண் தொடர்பான நோய்களைக் கண்டறிந்து சிகிச்சை வழங்கப்பட்டதுடன், பலருக்கு அன்றைய தினமே மூக்குக் கண்ணாடிகள் வழங்கப்பட்டுள்ளது. ஏனையோருக்கு வழங்குவதற்குரிய ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளது. இவ்வாறாக முழு அளவிலான மருத்துவ சேவையினை நாம் வழங்கிய பின்னர் இரண்டாம் நாள் நிறைவடைகின்ற போது அப்பகுதி மக்கள் கூறினார்கள் இப்படியான ஒரு மகத்தான மருத்துவ சேவையினை இதுவரை காலமும் நாங்கள் காணவில்லை. உங்களுடைய இந்தச் சேவை எங்களுக்கு மிகவும் பயனுடையதாக இருந்தது. இச்சேவையினைத் தொடர்ந்து செய்யும்படியும் வேண்டிநின்றனர்.

எமது தலைவரின் பணிப்பிற்கிணங்க தியாக தீபம் திலீபன் மருத்துவசேவையின் பங்கும் அளப்பரியது. ஏனென்றால் அதுதான் மிகவும் பெரிய சேவைகளைச் செய்துள்ளது. மக்களுக்கு நிறையப் பயன்கிடைத்திருக்கின்றது.

இந்த இரண்டு சேவையும் ஒரு நோக்கம் கொண்டவைதான். ஆனால் தியாகதீபம் திலீபன் மருத்துவ சேவை குறிப்பிட்ட பிரதேசத்தில் நிலையாக நிறுவப்பட்டுள்ள மருத்துவமனையாக இருந்து அப்பகுதி மக்களுக்கு சேவை செய்து வருகின்றது. ஆனால் இந்த கௌசல்யன் நடமாடும் மருத்துவசேவை பின்தங்கிய கிராமங்களுக்குச் சென்று ஒரு நாள் அல்லது இரண்டு நாள் வரையான மருத்துவ சேவையை மட்டும் வழங்கும். இதுதான் இந்த இரண்டு மருத்துவ சேவைக்குமிடையிலுள்ள வேறுபாடு.

இன்னுமொரு விடயம் இந்த நடமாடும் சேவைக்குக் கௌசல்யனின் பெயர் வைக்கக் காரணம். லெப்ரினன்ட் கேணல் கௌசல்யன் ஒரு தேசப்பற்று உடையவர். அவர் மக்களின் தேவை என்னவோ அவற்றை இனம் கண்டு அவர்களுக்குக் கிடைக்க வேண்டியதைப் பெற்றுக் கொடுத்து மக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்துவந்த ஒரு அரசியல் போராளி. அதனால் அவருடைய சேவை,அர்ப்பணிப்பு அவர் மறைந்தாலும் தொடர்ந்து நிலைக்க வேண்டும் என்பதற்காக அவருடைய பெயரினை இந்த நடமாடும் சேவைக்கு வைத்து மருத்துவசேவை புரிந்து வருகின்றோம்.

இந்தக் கௌசல்யன் நடமாடும் மருத்துவ சேவை ஒவ்வொரு மாதமும் பின்தங்கிய பிரதேசங்களில் மேற்கொள்ளப்பட இருக்கின்றது. அது எம்மால் ஒழுங்குபடுத்தப்பட்ட படிமுறைகளுக்கமைவாக அந்தந்தப் பிரதேசத்தில் நடாத்த ஏற்பாடு செய்துள்ளோம். அதனூடாக ஏராளமான மக்கள் நோய்களிலிருந்து விடுபடுவார்கள் என்ற நம்பிக்கையையும், அதற்காக எவ்வளவு தூரமும் நாங்கள் சேவை செய்யவும் தயாராகவும் உள்ளோம் என்றும் மருத்துவப்பிரிவுப் பொறுப்பாளர் ரேகா தனது உரையாடலில் தெரிவித்தார்.

# பொதுக் கட்டமைப்பிற்கு எதிரானவர்கள் தமது நிலைப்பாட்டை மீள் பரிசீலனை செய்க

## –சனாதிபதியின் பேச்சாளர் ஹரீம்பீரிஸ்

(கொழும்பு)

பொதுக்கட்டமைப்புக் குறித்து எதிர்மறையான நிலைப்பாட்டைக் கொண்டவர்கள் தமது முடிவுகளைப் பற்றி மீள்பரிசீலனை செய்ய வேண்டுமென சிறிலங்கா சனாதிபதியின் பேச்சாளர் ஹரீம் பீரிஸ் தெரிவித்துள்ளார்.

பொதுக்கட்டமைப்பின் மூலம் கிடைக்கக் கூடிய அதிக நன்மைகளைக் கருத்திற்கொண்டு தமது நிலைப்பாடு குறித்து அவர்கள் மீள் பரிசீலனை செய்யவேண்டும் எனவும் அவர் கேட்டுக்கொண்டார். ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்ட முஸ்லிம் பிரதேசங்களில் ஏற்பட்டிருக்கும் சேதங்கள் பற்றிய இடைக்கால மதிப்பீட்டு அறிக்கையை வெளியிட்டு நேற்றுமுன்தினம் உரையாற்றும்போதே அவர் இதனைத் தெரிவித்தார். பொதுக்கட்டமைப்பில் முதன் முறையாக விடுதலைப் புலிகளும் சமபங்காளிகள் என்ற அந்தஸ்தை இதன்மூலம் பெறுகின்றனர். அனைத்து மக்களும் ஒன்றிணைந்து பணியாற்றக் கூடிய சந்தர்ப்பத்தை ஆழிப்பேரலை ஏற்படுத்தியுள்ளது என்றார்

அவர். இதே வேளை உத்தேச பொதுக்கட்டமைப்பை நிறுவுவதற்கு மேலதிக கால அவகாசத்தை அளிக்குமாறு உதவி வழங்கும் நாடுகளிடம் சிறி லங்கா சனாதிபதி சந்திரிகா கேட்டுக் கொண்டுள்ளார்.

இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளின் கூட்டம் நடைபெறுவதற்கு முன்னர் உத்தேச பொதுகட்டமைப்பை நிறுவ முடியாதிருப்பதாகவும், அதற்கென மேலும் இருவார அவகாசத்தைத் தருமாறு வெளிநாட்டுத் தூதுவர்களிடம் சனாதிபதி வேண்டுகோள் விடுத்துள்ளார் என கொழும்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இலங்கைக்கு உதவி வழங்கும் பிரதான நாடுகளின் தூதுவர்களைக் கடந்த செவ்வாய்க்கிழமை சனாதிபதி மாளிகையில் சந்தித்தபோதே சனா திபதி இந்த வேண்டுகோளை விடுத்ததாக சனாதிபதி மாளிகை வட்டாரத் தகவல்கள் கூறுகின்றன. பொதுக்கட்டமைப்பு அமைப்பது தொடர்பாக அரசாங்கத்தில் அங்கம் வகிப்பவர்களுக்கிடையே பிரச்சினைகள் இருப்பதனால் மகாநாட்டிற்கு முன்னர் பொதுக் கட்டமைப்பை நிறுவுவதற்கு முடியாமலிருப்பதாக சனாதிபதி அந்தச் சந்திப்பில் தெரிவித்திருக்கிறார்.

பொதுக்கட்டமைப்பு நிறுவு வது குறித்து ஐக்கிய தேசியக்கட்சியிடமிருந்து எதிர்ப்பார்த்த உதவிகள் கிடைக்கவில்லை என்றும் அது பிரச்சினையை மேலும் சிக்கலாக்கியுள்ளது என்றும் அச்சந்திப்பின் போது சனாதிபதி மேலும் தெரிவித்துள்ளார். அதனால் பொதுக்கட்டமைப்பு நிறுவுவது சம்பந்தமாக ஐக்கிய தேசியக் கட்சியின் உதவியைப் பெறுவதற்கு வெளிநாட்டுத் தூதுவர்கள் உதவ வேண்டும் எனவும் அவர் தூதுவர்களைக் கேட்டுள்ளதாகத் தெரியவருகிறது. ஜப்பான், ஐரோப்பிய ஒன்றியம், பிரித்தானியா உட்பட பல நாடுகளின் தூதுவர்கள் சனாதிபதியுடனான இச்சந்திப்பில் கலந்து கொண்டனர்.


கிளிநொச்சி நகரில் !!
புகைப்படத்துறையில் புதிய அத்தியாயம் !!!
DIGITAL STUDIO அறிமுகம்.



10 நிமிடத்தில் பாஸ், மற்றும்
சகல அடையாள அட்டை படங்களையும் வழங்குகின்றோம்.
டிஜிற்றல் அல்பம் தயாரிப்பவர்கள்.

யாழ்ஒளி. K.S.R.PHOTOS.
டிஜிற்றல்வீடியோ புகைப்பட சேவை.
இல.05 கனகபுரம் தெரு, கிளிநொச்சி. 021-2285001. (6126)



### தனியார் பேருந்து உரிமையாளர் கழகம் வன்னி

### பொதுக் கூட்ட அழைப்பிதழ்

இடம்:– பண்பாட்டு மண்டபம், கிளிநொச்சி

காலம்:– 15. 05. 2005

நேரம்:– காலை –10. 00 மணி

**நிகழ்ச்சி நிரல்**

- அகவணக்கம்
- தலைவர் உரை
- செயலாளர் அறிக்கை
- பொருளாளர் அறிக்கை
- சபையின் கருத்துரை
- பிற விடயங்கள்
- நன்றியுரை

தங்களைத் தவறாது வருகை தருமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

"நன்றி"

சு.மனோகரன்
தலைவர். (6109)

த.ஜெகதீஸ்வரன்
செயலாளர்.



### வடகிழக்கு இளையோர் செயற்பாட்டு நிறுவனம்

பின்வரும் பதவிக்கான விண்ணப்பங்கள் தகைமையுடையவர்கள் ஆண்,பெண் இருபாலாரிடமிருந்தும் கோரப்படுகின்றது.

**பதவி நிலை:–** செயற்திட்ட உதவியாளர்.

**தகைமை:–** ஆங்கில மொழியில் தேர்ச்சியுடையவராகவும், கணினி அறிவுடையவராகவும் இருத்தல் அவசியமாகும். (க.பொ.த.சாதாரணம் ஆங்கிலம் 'C' தரத்துக்கு குறையாது இருத்தல்வேண்டும்.)

**சம்பளம்:–** நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.

விண்ணப்பங்கள் யாவும் 20.05.2005 ஆம் திகதிக்கு முன்பாக செயலாளர், இளையோர் செயற்பாட்டு நிறுவனம், யாழ்.வீதி, கிளிநொச்சி. எனும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

(சி.11955)



இலண்டன் TRTECH நிறுவன அனுசரணையுடன்
கிளிநொச்சி தொழில் நுட்பக்கல்வி நிறுவனம் நடாத்தும்
BASIC AUTO CAD பயிற்சிநெறிக்கான

### விண்ணப்பம் கோரல்

விரைவில் ஆரம்பமாகிறது

பொறியியல், கட்டட நிர்மாணத்துறை என்பவற்றில் பணி புரிவோருக்கும், அத்துறையில் ஆர்வம் உள்ளோருக்கும் முன்னுரிமை வழங்கப்படும்.

பயிற்சிக்கான கட்டணங்கள் எதுவும் அறவிடப்படமாட்டாது.

**தகைமைகள்**

- க.பொ.த (சா/த) ஆங்கிலம், கணிதம் உட்பட ஆறு பாடங்களில் சித்தி அடைந்திருக்க வேண்டும்.
- கணினி முன்னறிவு இருத்தல் வேண்டும்.

**தெரிவு:-**

முதற்கட்டமாக ஒரு குழுவில் 10 மாணவர்களையே சேர்த்துக்கொள்ள இருப்பதால் விரைவாக அனுமதியை பெறவும்.

தகுதியானவர்கள் 20.05.2005 இற்கு முன்னர் தங்கள் விண்ணப்பங்களை நேரிலோ,தபால்மூலமோ பின்வரும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

அதிபர்,
தொழில்நுட்பக்கல்வி நிறுவகம்,
A9 வீதி,
கிளிநொச்சி.

(சி.11964)



### கேள்வி அறிவித்தல்

**வலயக்கல்வி அலுவலகம், தென்மராட்சி**

கீழே குறிப்பிடப்பட்டுள்ள வேலைகளுக்கான கேள்விகள் தென்மராட்சி வலயக்கல்விப் பணிப்பாளரினால் 2005ஆம் ஆண்டு மே மாதம் 19 ஆம் திகதி ஏற்றுக்கொள்ளப்பட்டு அன்றைய தினமே முற்பகல் 11. 30 மணிக்குத் திறக்கப்படும். அச்சமயம் விரும்பும் கேள்விதாரர் அல்லது அவரால் அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதி சமுகமளிக்கலாம்.

| பாடசாலையின் பெயரும் வேலை விபரமும் | மீளளிக்கப்படாத வைப்புப்பணம் | மீளளிக்கப்படும் வைப்புப்பணம் | இக்ராட் இலக்கம் |
|---|---|---|---|
| 1.யா/மீசாலை வீரசிங்கம் ம.வி.(20'30' கணனி பயிற்சி அறை கீழ்மாடி அமைத்தல்) | 500/- | 15000/- | எம்.8 |

01. அ). மேற்படி வேலைக்கு இக்ராட் (ICTAD) நிறுவனத்தின் 08ஆம், அதற்கு மேற்பட்ட தரத்திற்கும் பதிவுசெய்து கொண்டவர்கள் விண்ணப்பிக்கத் தகுதி பெற்றவர்களாவர்.

02. கேள்விப்பத்திரங்களில் பெறுமதி சேர்வரி (VAT) 15% சேர்க்கப்பட்ட கேள்வித்தொகை பெறுமதி சேர்வரி (VAT) 15% சேர்க்கப்படாத கேள்வித் தொகை என்பன பனித்தனியாகக் குறிப்பிடப்படுதல் வேண்டும்.

03. மேற்படி வேலைக்கான கேள்விப் பணத்தை தென்மராட்சி கல்வி வலயத்தின் வலயக்கல்விப் பணிப்பாளரின் வங்கிக் கணக்கில் வைப்புச்செய்து அல்லது இக்காரியாலயத்தில் நேரடியாகச் செலுத்தி 12. 05. 2005 ஆம் திகதியிலிருந்து 17. 05. 2005ஆம் திகதி நண்பகல் 12. 00மணிவரை தென்மராட்சிக்கல்வி அலுவலகப் பாடசாலை வேலைகள் கிளையில் படிவங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

04. விண்ணப்பங்கள் யாவும் இரு பிரதிகளில் பூர்த்தி செய்து மூலப்பிரதியும் எம்மால் வழங்கப்படும் ஒப்பந்த நிபந்தனைப் படிவமும் கையொப்பம், இறப்பர் முத்திரை என்பன இடப்பட்டு அவற்றினையும் கேள்விப்பத்திர இணைப்பிரதியினையும் தனித்தனியே கடித உறைகளில் போடப்பட்ட இரு பிரதிகளையும் பிறிதொரு கடித உறையிலிட்டு ஒட்டப்பட்டு, ஒப்பந்தக்காரரின் முத்திரை இடப்பட்டு தென்மராட்சி வலயக்கல்வி அலவலகத்திலுள்ள கேள்விப்பெட்டியின் 2005 ஆம் ஆண்டு மே மாதம் 19 ஆம் திகதி வியாழக்கிழமை மு. ப. 11–00 மணிக்குமுன்னர் இடப்பட வேண்டும். மேற்குறிப்பிட்ட கால நேரத்திற்குப் பிந்திய கேள்விப் பத்திரங்கள் எக்காரணம் கொண்டும் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

05. தெரிவு செய்யப்பட்ட கேள்விதாரர் தெரிவு செய்யப்படும் திகதியிலிருந்து 06 மாத காலத்திற்குள் அமைத்து வேலைகளையும் பூர்த்தி செய்து கையளிக்க வேண்டும். எதுவித காலதாமதங்களும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. சரியாக நிரப்பப்படாத, பிழைகள் கூடிய தெளிஅற்ற கேள்விப்பத்திரங்கள் நிராகரிக்கப்படும்.

06. கேள்வி ஆவணங்களை இலவசமாகப் பார்வையிடுவதுடன் மேலதிக விவரங்களைப் பாடசாலை வேலைகள் கிளையிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

பாடசாலை வேலைகள் கிளை,
வலயக்கல்வி அலுவலகம்,
தென்மராட்சி. (சி-11887)

திருமதி. றெ. இருதயநாதன்
வலயக்கல்விப் பணிப்பாளர்,
தென்மராட்சி.

உள்ளூராட்சி மாகாணசபைகள் அமைச்சு
வடக்கு கிழக்கு மாகாணசபை.
போரினால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களுக்கான புனரமைப்புத் திட்டம் (கார்ப்)
ஆசிய அபிவிருத்தி வங்கியினால் நிதிப்படுத்தப்பட்டது
"ஆ.அ.வ" கடன் இல.2043– SRI(SF)
(பகுதி C-சமுதாய மீளமைப்பும் அபிவிருத்தியும்)

# கேள்வி அறிவித்தல் 05

## கட்டட நிர்மாண வேலைகளைப் பெறுதல்

01. போரினால்பாதிக்கப்பட்ட பிரதேசங்களுக்கான புனரமைப்புத் திட்டத்தின் (CAARP) ஆகுசெலவு சார்பாக ஆசிய அபி விருத்தி வங்கியிடமிருந்து கடனொன்றை இலங்கை அரசாங்கம் பெற்றுள்ளது. கீழேயுள்ள அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள கட்டட நிர்மாண வேலைகளுக்காக இந்தக் கடனின் ஒரு பகுதி பிரயோகிக்கப்பட உத்தேசிக்கப்பட்டுள்ளது.

02. இதன் பின்னகத்துத் தொழில் தருநராகக் குறிப்பிடப்படும் (CAARP), கருத்திட்ட கேள்விச்சபையின் தலைவர் கருத்திட்டத்தின் கீழ் பின்வரும் ஒப்பந்தங்களுக்குத் தகுதிவாய்ந்த கேள்விதாரர்களிடமிருந்து அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகளைக் கோருகின்றார்.

| தொடர் இலக்கம் | ஒப்பந்த இணங்காட்டல் இலக்கம் | கேள்வியின் பெயர் | ஆகக் குறைந்த ITCAD பதிவு | கேள்வி பிணைப்பணம் (ரூபா) |
|---|---|---|---|---|
| 01. | KN/CAARP/ED/17 | கிளி/சுனாவில் அ.த.க.பாடசாலையில் 120'x25' வகுப்பறைக்கட்டடமும் 110'x25' நூலகம், செயற்பாட்டறைக்குமான கட்டடமும் அமைத்தல். | M7 | 49000/- |
| 02. | KN/CAARP/ID/01 | கிளிநொச்சி நிகொட் அலுவலருக்கான சுற்றுலாவிடுதி அமைத்தல். | M7 | 43000/- |

03. பின்வரும் தகுதிகளைக் கொண்டுள்ளதாக விளங்கும் உறுதியான நோக்கமுடைய சகல ஒப்பந்தக்காரர்களுக்கும் கேள்விகள் திறந்துள்ளது.

I. நிர்மாணப்பயிற்சி, அபிவிருத்தி நிறுவனத்தினால் (ICTAD) விருத்தி செய்யப்பட்ட தேசிய நிர்மாண ஒப்பந்தக்காரர், பதிவு தரப்படுத்தல் திட்டத்தின் கீழ் மேற்படி அட்டவணையில் குறிந்துரைக்கப்பட்ட தரமொன்றில் ஒப்பந்தக்காரர் பதிவு செய்யப்பட்டிருக்க வேண்டும்.

II. இலங்கை தேசிய நிர்மாண ஒப்பந்தக்காரர் சங்கத்தின் (இ.தே.நி.ஒ.ச) உறுப்பினராக ( ICTAD டுடன் M7 இற்கு மேல் பதிவு செய்தவர்களுக்கு மட்டும்) விளங்கவேண்டும்.

III. கடந்த ஐந்து வருடங்களினுள் ஆகக்குறைந்தது இரு ஒத்த தன்மையிலான ஒப்பந்தங்களைத் திருப்திகரமாக முடிவுறுத்தியுள்ளதுடன் , கடந்த ஐந்து வருடங்களின்போது மேற்கொள்ளப்பட்ட வேலையில் செய்யப்பட்ட திருப்திகரமான சாதனையைக் கொண்டிருத்தல் வேண்டும். அத்துடன் 1.7.2003 திகதிக்குப் பின்பு தங்களைப் பதிவுசெய்த கிளிநொச்சி மாவட்டத்தைச் சேர்ந்த ஒப்பந்தக்காரர்கள் இதுபோன்ற வேலைகளை அல்லது இதற்குச் சமமான வேலைகளை ஒப்பந்தகாரர்களாக அல்லது உப ஒப்பந்தக்காரர்களாக இருக்க வேண்டும். இதற்கு வாடிக்கையாளர்களிட மிருந்து அத்துடன் / அல்லது உசாவலர்களிடமிருந்து சான்றுப் பத்திரங்களின் மூலம் ஆதரவளிக்கப்பட வேண்டும். இக்காலத்தின் போது மேற்கொள்ளப்பட்ட சகல வேலை களினதும் முழு நிரலொன்றை வழங்குமாறு கேள்வி கோருபவர் வேணடப்படுகின்றனர்.

IV. "இக்டாட்" வழிகாட்டல் முறைகளின் பிரகாரம் கணக்கிடப்பட்டவாறு வேலையைப் பொறுப்பேற்பவர் போதியகேள்வி கோரும் ஆற்றலளவைக்கொண்டிருக்க வேண்டும்.

V. மோசடியான அல்லது வஞ்சனையான நடவடிக்கைகளுக்கு அல்லது திருப்திகரமற்ற வேலை செயற்றிறனுக்குத் தகுதியற்றவர் என்ற பிர கடனத்தின் கீழ் விளங்கக்கூடாது.

VI. கேள்வி ஆவணங்கள் வழங்கப்படுவதற்கு முன் ஒப்பந்தக்காரரின் புதுப்பிக்கப்பட்ட பதிவுப் புத்தகத்தைச் சமர்ப்பிக்கக் கூடியவராக இருக்க வேண்டும்.

04. மேற்படி பந்தி 2 இல் குறிப்பிடப்பட்டுள்ள கேள்விகளில் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட பகுதிகளுக்குக்கேள்வி கோரலாம். ஒவ்வொரு ஒப்பந்த விடயமும் புறம்பான கேள்வியாக அமைய வேண்டும். ஏதேனும் ஒப்பந்தக்காரருக்கு அனுமதிக்கப்படும் ஆகக்கூடுதலான ஒப்பந்தங்களின் எண்ணிக்கை நிகொட் திட்டத்தின் கீழ் நடைமுறையிலிருக்கும் ஒப்பந்தம் உட்பட மூன்றாகும். அல்லது 1.07.2003 திகதிக்குப் பின்பு தங்களைப் பதிவு செய்த கிளிநொச்சி மாவட்டத்தைச் சேர்ந்த ஒப்பந்தக்காரர்கள் இதுபோன்ற வேலைகளை அல்லது இதற்குச் சமமான வேலைகளை ஒப்பந்தக்காரர்களாகவோ அல்லது உபஒப்பந்தக்காரர்களாகச் செய்திருந்தால் வடக்குக் கிழக்கு சமுதாய மீளமைப்புஅபிவிருத்தித்திட்டத்தின் கீழ் ஒரு நேரத்தில் ஆகக் கூடுதலாகப் பெற்றுக்கொள்ளக் கூடிய ஒப்பந்தம் ஒன்றாகும்.

05. ஆர்வமுள்ள தகுதிவாய்ந்த கேள்விதாரர் மேலதிக தகவல்களைக் கேள்விப்படிவத்திலிருந்து பெறமுடியும் என்பதுடன், கேள்வி ஆவணங்களை வடக்கு-கிழக்கு சமுதாய மீளமைப்பு அபிவிருத்திட்டம் (நிகொட்), மாவட்ட செயலகம், கிளிநொச்சி என்ற விலாசத்திலுள்ள மாவட்டப் பிரதி திட்டப் பணிப்பாளரின் அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

06. கேள்வி ஆவணங்களை 16.05.2005 திகதியிலிருந்து 26.05.2005 ஆம் திகதி வரை காலை 9.30 இலிருந்து பிற்பகல் 3.00 மணிவரை வேலை நாட்களில் மேற்படி அலுவலகத்திலிருந்து இது தொடர்பாக மீளளிக்கப்படாத கட்டணம் ரூபா 1000 த்தை (கேள்வி ஆவணம் ஒன்றுக்கு) செலுத்திக் கொள்வனவு செய்துகொள்ளலாம்.

07. கேள்வி கோருபவர்களுக்கான பணிப்புரையின் பிரிவு I வாசகம் II குறிந்துரைக்கப்பட்டவாறு தேவையான கேள்வி அடங்கிய ஆவணங்களை இது தொடர்பாக பந்தி 8 இல் குறிப்பிடப்பட்டுள்ள இடம், திகதி மற்றும் நேரம் ஆகியவற்றுடன் இணங்கும் வகையில் ஒப்படைக்கப்படவேண்டும்.

08. அரக்கு முத்திரையிட்ட கேள்விகள் உரிய பிணைப்பணத்துடன் தலைவர், மாவட்ட கேள்விச்சபை, நிகொட் கருத்திட்டம்,கச்சேரி, கிளிநொச்சி என்ற முகவரிக்கு 30.05.2005 திகதி பி.ப.1.00 மணிக்கு முன்பதாகக் கிடைக்கவேண்டும். உடனடியாக கேள்விகள் திறக்கப்படும். கேள்விதாரர் அல்லது அவர்களது அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதிகள் சமுகமளிக்கலாம்.

09. கேள்வி சம்பந்தப்பட்ட கூட்டமொன்று 20.05.2005 ஆம் திகதி அன்று முற்பகல் 10.30 மணிக்கு கச்சேரியில் நடைபெறும்.

10. கேள்வி தயாரிப்பதற்கு அல்லது ஒப்படைப்பதற்கு கேள்விதாரர்களுக்கு ஏற்படும் ஏதாவது ஆகுசெலவுகளுக்கு அல்லது செலவீனங்களுக்கு தொழில் தருனர் பொறுப்பாக விளங்கமாட்டார்.

*தி. இராசநாயகம்,*
*தலைவர், மாவட்ட கேள்விச்சபை,*
*அரசாங்க அதிபர்,*
*கிளிநொச்சி மாவட்டம்.*

(சி-11965)

# பஸ்வானின் திட்டத்தை லல்லு நிராகரித்தார்

## பீகார் அரசியல் தொடர்ந்தும் குழப்பத்தில்

பீகாரில் ராஷ்ரிய ஜனதாதளத்தையும் உள்ளடக்கிய கூட்டணி ஆட்சி அமைக்க பஸ்வான் கூறிய திட்டத்தை லல்லுப்பிரசாத் நிராகரித்து விட்டார். பீகார் சட்டசபை தேர்தலில் எந்தக்கூட்டணியும் ஆட்சி அமைக்க பெரும்பான்மை கிடைக்காத நிலையில் லல்லுப்பிரசாத்தின் ராஷ்டிரிய ஜனதாதளம் ஆட்சி அமைக்க காங்கிரஸ் ஆதரவு வழங்கியது. ஆனால் மொத்தம் உள்ள 243 உறுப்பினர்களில் தேவையான 122 உறுப்பினர்களின் ஆதரவை லல்லுவால் திரட்ட முடியவில்லை. அதைத்தொடர்ந்து பீகாரில் சனாதிபதி ஆட்சி அமுல்படுத்தப்பட்டது.ஆயினும் சட்டசபை கலைக்கப்பட வில்லை. பீகாரில் பா.ஜ. ராஷ்டிரிய ஜனதாதளம் இடம்பெறும். ஆட்சி அமைக்க ஆதரவு தரமாட்டேன் என்று லோக் ஜனசக்தி கட்சி தலைவர் ராம்விலாஸ் பஸ்வான் இது வரை கூறிவந்தார். நேற்று முன்தினம் அவர் தனது முடிவை மாற்றி கூட்டணி ஆட்சி அமைக்க புதிய திட்டம் ஒன்றை அறிவித்தார்.

ஆனால் இந்தத் திட்டத்தை லல்லுப்பிரசாத்தின் ராஷ்டிரிய ஜனதா தளம் நிராகரித்துவிட்டது. இதுபற்றி அந்தக் கட்சியின் செய்தித் தொடர்பாளர் ஷிவானந்த் திவாரி கூறியதாவது:

பீகாரில் ஆட்சி அமைப்பது தொடர்பாக காலத்திற்கு ஒவ்வாத ஒவ்வொரு திட்டத்தையும் பஸ்வான் தினசரி கூறி வருகிறார். இப்போது அவர்கூறி இருப்பதும் அதுபோன்ற ஒரு திட்டம்தான். அதை ராஷ்டிரிய ஜனதாதளம் ஏற்காது. பஸ்வான் தனது கட்சியில் உள்ள 29 எம்.எல்.ஏ.க்கள் ஓடிவிடாமல் இருக்க புதுப் புதுத்திட்டங்களை கூறுகிறார். பீகாரில் மதசார்பற்ற ஆட்சி அமைக்க வேண்டுமானால் மதசார்பின்மை பற்றி கேள்வி எழுப்ப முடியாது. ராஷ்டிரிய ஜனதா தளத்தின் நம்பிகையைப் பெற வேண்டும் என்றார்.

# பாராட்டி வாழ்த்துகிறோம்

*பனங்காமம் பற்று ப.நோ.கூ.சங்கத்தில் அலுவலக உதவியாளராக கடமைபுரியும் பாண்டியன் குளம் கரும்புள்ளியானைச் சேர்ந்த*

## தி.ஜெகதீபன்

*என்பவர் கடந்த 09.05.2005 திங்கட்கிழமை காலையில் அலுவலகத்தை சுத்தம் செய்த போது அங்கு ஒருபவுண் எடையுடைய மோதிரம் ஒன்றை கண்டெடுத்து உரியவரிடம் ஒப்படைத்துள்ளார். இவரது நேர்மையை பனங்காமம் பற்று ப.நோ.கூ.ச.பணிப்பாளர், பணியாளர்கள் ஆகிய நாம் பாராட்டி வாழ்த்துகிறோம்.*

பணிப்பாளர்,
பணியாளர்கள்,
பனங்காமம்பற்று ப.நோ.கூ. சங்கம்
நட்டாங்கண்டல். (சி-11889)

# இருபதாம் ஆண்டு நினைவலைகள்

## லெப்டினன் பிரசன்னா

## இரத்தினம் சதானந்தன்


இல. 112 ஸ்கந்தபுரம்



தாயின் மடியில் 16.03.1964

தரணியின் விடிவில் 14.05.1985

அன்னியனின் பிடியிலிருந்து எம்மண்ணை விடுவிக்க
மறவர் படைதனில் இணைந்து
தலைவன் வழிநடந்து
கயவர் படைதனை – அழித்து
எம்தேச விடுதலைக்காய்
உன் உயிரை வித்தாக்கினாய்
இருபது ஆண்டுகள் – நீ
எம்மைவிட்டுச் சென்றாலும்
இன்று நடந்தது போல் எம்மனதில்
நீ உள்ளாய்.




இல.112 ஸ்கந்தபுரம்
கிளிநொச்சி

என்றும் உன் நினைவுடன்
குடும்பத்தினர்.

(6132)

யாழ்ப்பாணம்



# வெற்றி என்பது வீரர்களின் திறமையிலே தங்கியுள்ளது; அவுஸ்திரேலியஅணியை உலக 11பேர் அணிவெல்லும்



கவாஸ்கர்

பயிற்சியாளர் என்பவர் மேஜிக்நிபுணர் அல்ல. அவர் மாயாஜாலம் எதையும் செய்து அணியை வெற்றி பெறவோ அல்லது தோல்வி அடை யவோ செய்து விடமுடியாது என்கிறார் முன்னாள் இந்திய அணித்தலைவர் சுனில் கவாஸ்கர்

வெற்றி - தோல்வி என்பது அணியில் இடம்பெற்றுள்ள ஒவ்வொரு வீரர்களின் தனிப்பட்ட திறமையின் அடிப்படையில் கிடைக்கும். இதுவரை பயிற்சியாளராக இருந்த ஜோன்ரைட் நல்ல மனிதர்.

இந்திய அணி 2006ஆம் ஆண்டு மேற்கிந்தியத்தீவுக்கு சுற்றுப்பயணம் செய்கிறது. அங்கு 2007 ஆம் ஆண்டு உலகக் கோப்பை போட்டி நடப்பதால் இந்த சுற்றுப்பயணம் நல்ல பயனளிக்கும்.

ஒவ்வொரு வீரர்களும் மேற்கிந்தியத்தீவில் உள்ள ஆடுகளம், அதன் தன்மை, கால நிலை, எதிரணி வீரர்களின் தன்மை ஆகியவற்றை அறிந்து கொள்ள முடியும். இந்திய ஏ அணி வீரர்கள் அங்கு சுற்றுப்பயணம் செய்து சிறப்பாக விளையாடினார்கள். அவர்களில் சிலர் உலக கோப்பைக்கான இந்திய அணியில் தேர்வுசெய்யப்பட வாய்ப்புள்ளது. உலக 11 பேர் அணி மற்றும் அவுஸ்திரேலியா அணிகளுக்கு இடையே நடக்கும் போட்டியில் உலக11பேர்அணி வெற்றி பெறும். கடந்த ஒரு மாதத்திற்கு முன்பு கங்குலியை அணியை விட்டு வெளியேற்ற வேண்டும் என்று கூறியவர்கள் தற்போது அவரை மீண்டும் அணியில் சேர்க்க வேண்டும் என்கிறார்கள். டெண்டுல்கரின் மோசமான ஆட்டம் விரைவில் முடிவுக்கு வரும். சேவாக், ராவிட் ஆகியோர் எந்தவிதநிர்ப் பந்தமும் இல்லாமல சிறப்பாக விளையாடுகிறார்கள். ஹர்ப்ஜன், முரளிதரன், அக்தர் ஆகியோரின் பந்து வீசுப் பற்றி ஆய்வு நடக்கிறது. இவர்களைப்போல் வோர்னேவும் வித்தியாசமான முறையில் பந்து வீசக்கூடியவர்தான். இவ்வாறு அவர் கூறினார்.

# தேசிய டெகாதலன்,ஹெப்ரதலன் மெய்வன்மைப் போட்டி

## ரவீந்திரன் ரதீசன் தேசிய ரீதியில் புதிய சாதனை

இலங்கை மெய்வல்லுநர் சங்கம் மே மாதம் ஏழாம் எட்டாம் திகதிகளில் கொழும்பு சுகததாஸ விளை யாட்டு அரங்கில் நடத்திய தேசிய டெகாதலன் (தசம) ஹெப்ரதலன் (சப்த) மெய்வல்லுநர் சம்பியன் நிகழ்வுகளில் திருகோணமலை மாவட்ட மெய்வல்லுநர் சங்கத்தைச் சேர்ந்த ரவீந்திரன் ரதீசன் தசம நிகழ்வில் 6164 புள்ளி களைப் பெற்று முதலிடத்தைப் பெற்றதுடன் 2003ஆம் ஆண்டு தாம் நிகழ்த்திய தேசிய சாதனையை முறியடித்தே புதியதேசிய சாதனை (2005) ஒன்றை நிலைநாட்டினார். (தசமநிகழ்வுப் போட்டிகளில்) நூறு மீற்றரை பதினொரு விநாடிகளிலும், நாநூறு மீற்றரை 51.2 விநாடிகளிலும், 1500 மீற்றரை ஐந்து நிமிடம் 5.02 விநாடிகளிலும் 110 மீற்றர் தடைதாண்டி ஓடுதலை 16.1 விநாடிகளிலும் ஓடிமுடித்து முதலாவதாக வந்த ரதீசன் உயரம் பாய்தலில் 1.79 மீற்றர் பாய்ந்தும் 3.79 மீற்றரை தடிஊன்றிப்பாய்ந்தும், 6.77 மீற்றரை நீளம் பாய்ந்தும் முதலாவதாக வந்தார். குண்டெறிதலில் 9.50 மீற்றர் எறிந்தும், பரிதிவட்டம் வீசுதலில் 31.87 மீற்றர் வீசியும், யவலின் எறிதலில் 42.39 மீற்றர் எறிந்தும் ரதீசன் சாதனைபடைத்தார்.(தசம மெய்வல்லுநர் நிகழ் வில் 2003ஆம் ஆண்டு நடைபெற்ற சம்பியன்களுக்கான போட்டியில் ரதீசன் 5999 புள்ளிகளைப் பெற்று முதலாவதாக வந்து தேசியசாதனையை நிலைநாட்டினார். தான் நிலை நாட்டிய அச்சாதனையை ரதீசன் கடந்தவாரம் கொழும்பில் நடைபெற்ற போட்டியில் 6164 புள்ளிகளைப் பெற்றுது தாமே முறி யடித்தார்.

திருமலை மாவட்ட விளையாட்டு அதிகாரி எஸ்.விஜயநீதன் ரதீசனின் பயிற்சியாளராவார். பாங்கொக்கில் 2002 நடைபெற்ற ஆசிய கனிஷ்ட மெய்வல்லுநர் சம்பியன் போட்டிகளில் முதல் தடவையாக பங்கேற்ற ரதீசன் அங்கு 5776 புள்ளிகளைப் பெற்று 9ஆவது இடத்தைப் பெற்றதுடன் கனிஷ்ட தசம மெய்வல்லுநர் நிகழ்வுப் போட்டிநிகழ்வில் இலங்கையில் சாதனை ஒன்றையும் நிலைநாட்டினார். ரதீசன் திருகோணமலை சென்ஜோசப் கல்லூரியில் கல்வி கற்றவர். (25)

# தென்னாபிரிக்க முன்னனி பந்து வீச்சாளர்களுக்கு சர்வதேச கிரிக்கெட் சபை [ஐ.சி.சி] அபராதம்



தென்னாபிரிக்க கிரிக்கெட் அணியின் வேகப்பந்து வீச்சாளர் மக்காயா என்டினிக்கும் லாங்க்வெல்ட்டுக்கும் சர்வதேச கிரிக்கெட்சபை அபராதம் விதித்துள்ளது.

அண்மையில் நடைபெற்ற போட்டியில் இவர்கள் கிரிக்கெட் விதிமுறைகளையும் மீறி அதிகமாக ஆட்டமிழப்பு முறையீடுகளைச் செய்தனர் என குற்றஞ்சாட்டப்பட்டு இருவருக்கும் முறையே சம்பளத்தில் 25, 20 வீதம் அபராதம் செலுத்த வேண்டுமென ஐ.சி.சி. உத்தரவிட்டுள்ளது.

தென்னாபிரிக்க அணி இனிவரும் இரண்டு போட்டிகளிலும் றுனகோ மோர்ட்டன் எனற துடுப்பாட்ட வீரரை மூன்று வருடங்களின் பின்னர் அணிக்கு அழைத்துள்ளது.

தென்னாபிரிக்க-மேற்கிந்தியத்தீவுகளுடனான ஐந்து போட்டிகள் கொண்ட ஒரு நாள் தொடரை ஏற்கனவே 3-0 என்ற ரீதியில் கைப்பற்றியுள்ளமை குறிப்பிடத்தக்கதுடன் மேற்கிந்தியத்தீவுகள் இரு தொடர்களையும் பறிகொடுத்துள்ள நிலையில் வரும் புதனன்று பாகிஸ்தானுடான தொடரை சந்திக்கவிருக்கின்றது.

# சிறிலங்கா கிரிக்கெட் சபையின் பேச்சாளராக அர்ஜுன ரணதுங்க



1996ஆம் ஆண்டு நடைபெற்ற உலகக் கிண்ணத்தைப் பெற்றுக் கொடுத்த சிறிலங்கா கிரிக்கெட் அணியின் முன்னாள் தலைவர் அர்ஜுன ரணதுங்க மீண்டும் கிரிக்கெட் உலகில் பிரவேசித்துள்ளார்.

தற்போது சபையின் பேச்சாளராக இருக்கும் அரவிந்த டி சில்வாவை நீக்கிவிட்டு அந்த இடத்தை ரணதுங்க பெற்றுக் கொள்கிறார். இவர் 2003ஆம் ஆண்டு கிரிக்கெட் சபைத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

இந்தப் பதவியுடன்தான் கிரிக்கெட்துறைக்கு எதையாவது செய்யவிரும்புவதாக அவர் தெரிவிக்கிறார்.

அண்மையில் நாட்டின் கிரிக்கெட்டில் ஏற்பட்டுள்ள குழப்ப நிலையால் அது சரியான வழியில் செல்லவில்லை. இதனைக் கருத்திற்கொண்டு முன்னைய நிலைக்கு அதனையிட்டுச் செல்ல வேண்டியிருக்கிறது எனக் கூறிய ரணதுங்க 1996ஆம் ஆண்டு வெற்றிக்குப் பின் கிரிக்கெட்டுக்கு நல்ல மதிப்பிருந்தாகத் தெரிவித்துள்ளார். இவர் நாளை மறுநாள் டுபாயில் நடைபெறும் ஐ.சி.சி. கூட்டத்தில் கலந்து கொள்வார்.

# சுனாமி நல நிதி கால்பந்துப் போட்டி பரபரப்பான இறுதிப் போட்டி இன்று

எல்லைப்படை மாவீரர் நினைவாகவும், சுனாமியால் பாதிக்கப்பட்ட சிறார்களின் கல்வி வளர்ச்சிக்காகவும் தமிழீழ விளையாட்டுத்துறையின் யாழ் .மாவட்டப்பிரிவின் ஆதரவுடன் வலிகாமம் உதைபந்தாட்ட லீக் மின்னொளியில் நடத்தும் இறுதிப்போட்டி இன்று இரவு 9.00 மணிக்கு சுன்னாகம் கந்தரோடை ஸ்கந்தவரோதயாக்கல்லூரி மைதானத்தில் இடம்பெறவுள்ளது.

இன்றைய இறுதி ஆட்டத்தில் யாழ்ப்பாணம் பல்கலைக்கழக விளையாட்டுக் கழகமும், நாவாந்துறை சென்மேரிஸ் விளையாட்டுக்கழகமும் மோதவுள்ளன.

மற்றும் 40 வயதிற்கு மேற்பட்டோருக்கான இறுதிப் போட்டியில் வலிகாமம் உதைபந்தாட்ட லீக் அணியும் யாழ்ப்பாணம் உதைபந்தாட்ட லீக் அணியும் மோதவுள்ளன.

இன்றைய ஆட்டங்களில் முதன்மை விருந்தினர்களாக தமிழீழ விடுதலைப்புலிகளின் மூத்த உறுப்பினர்கள் கலந்து கொள்ளவுள்ளனர். (41)

# வோர்ன் சதம்

இங்கிலாந்தில் கவுண்டி கிரிக்கெட் போட்டி நடந்து வருகிறது. இதில் ஹம்ப்ஷயர் அணிக்காக ஆடிவரும் அவுஸ்திரேலிய சுழற்பந்து வீச்சாளர் வோர்ன் கென்ட் அணிக்கெதிராக ஒன்பதாவது வீரராக களமிறங்கி சதம் அடித்தார். இது அவரது முதல் சதமாகும். அவர் 72 பந்துகளில் 16 பவுண்டரி மூன்று சிக்சருடன் 107 ஓட்டம் எடுத்து ஆட்டம் இழக்காமல் இருந்தார். அவரது அதிரடி ஆட்டத்தால் ஹம்ப்ஷயர் அணி 328 ஓட்டம் எடுத்தது.

வோர்ன் 2001 ஆம் ஆண்டில் நியூசிலாந்துக்கு எதிரான டெஸ்டில் 99 ஓட்டம் எடுத்ததே அதிக பட்சமாகும்.

# துணுக்காய்ப் பிரதேச செயலக கழகங்களுக்கான வி.போட்டி

துணுக்காய்ப் பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட கழகங்களுக்கு இடையிலான விளையாட்டுப் போட்டியின் இறுதிநாள் நிகழ்வுகள் (18.05.2005) புதன்கிழமை மாலை 2.00 மணிக்கு துணுக்காய்ப் பிரதேச பொது விளையாட்டுமைதானத்தில் நடைபெறவுள்ளது. இந்நிகழ்வில் பிரதமவிருந்தினராக புதுக்குடியிருப்பு பிரதேச செயலாளர் செ.தயானந்தா கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளார். இந் நிகழ்வின் ஆரம்பநிகழ்வுகளான பெண்களுக்கான மரதன் ஓட்டப் போட்டி 15.05.2005 ஞாயிறு காலை 6.00 மணிக்கு பாலையடிச் சந்தியில் ஆரம்பிக்கப்படும். 16.05.2005 திங்கள் மெய்வல்லுநர் தெரிவு நிகழ்வு துணுக்காய்ப் பிரதேச பொதுவிளையாட்டு மைதானத்தில் நடைபெறும் 17.05.2005 செவ்வாய் காலை 6.00 மணிக்கு சைக்கிள் ஓட்டப் போட்டி துணுக்காய் பிரதேச செயலகம் முன்பாக ஆரம்பிக்கப்படும் 18.05.2005 புதன்கிழமை காலை 6.00 மணிக்கு ஆண்களுக்கான மரதன் ஓட்டப்போட்டி துணுக்காய்ப் பிரதேச செயலகம் முன்பாக ஆரம்பிக்கப்படுமெனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. மேற்படி போட்டிகளில் ஒட்டுசுட்டான். பாண்டியன்குளம் பிரதேச விளையாட்டு வீரர்கள் பங்குபற்றவிரும் பினால் அப்பிரதேச விளையாட்டுத் துறையின உறுதிப்படுத்தலுடன் விண்ணப்பிக்க வேண்டப்படுகின்றனர். (24)



இஸ்தான்புல்லில் நடந்த 'துர்க்கிஸ் கோப்பைக்கான' கால் பந்து இறுதிப்போட்டியில் கெலட்டசரே அணி 5-1 என்ற கோல் கணக்கில் பெனர்பாக் அணியை வீழ்த்தி சம்பியனானது கோப்பையுடன் கெலட்டசரே அணி வீரர்கள்.

# விதியை யாரோ ஒருவருக்காக மாற்றியமைக்க முடியாது

– இசன்மாணி

ஒருவிதியை நாம் ஒரு முறை உருவாக்கினோம் என்றால் அதைக் கண்டிப்பாக மதித்து நடக்க வேண்டும். அப்போதுதான் அந்த விதி உருக்குலையாமல் இருக்கும் எனத் தெரிவிக்கிறார் ஐ.சி.சி தலைவர் இசன்மாணி. இந்த விதி யாரோ ஒருவருக்குப் பிடிக்கவில்லை என்பதற்காக அதை மாற்றி அமைக்க ஒவ்வொரு முறையும் முயற்சி செய்தால் அந்த விதி அர்த்தம் இல்லாததாகி விடும்.

கங்குலிக்கு தடைவிதிக்கப் பயன்படுத்திய விதிக்கு சர்வதேச கிரிக்கெட் சபையில் இடம்பெற்றுள்ள அனைத்து நாடுகளும் ஒப்புதல் அளித்து இருக்கிறது. இதில் கடுமை இருக்கிறது என்றால் அப்போதே எதிர்ப்புத் தெரிவித்திருக்கலாம்.

இந்த விதிப்படி ஒரு வீரருக்கு குறைந்தபட்சம் நான்கு போட்டிகளிலும் அதிக பட்சம் எட்டுப் போட்டிகளிலும் ஆடத்தடை விதிக்க முடியும். கங்குலி இதில் நடுத்தரமான தண்டனையாக ஆறு ஆட்டங்களில் விளையாடத் தடை பெற்று இருக்கிறார் என்றார்.





# யாழ். செயலக அணி வெற்றி

வடமாகாண மதுவரித் திணைக்களம் அரச திணைக்களங்களுக்கு இடையே நடத்திய உதைபந்தாட்ட சுற்றுப் போட்டியில் யாழ்.செயலக விளையாட்டுக் கழக அணியினர் வெற்றி பெற்றுள்ளனர்.


அரியாலை ஐக்கிய சனசமூக நிலைய விளையாட்டு மைதானத்தில் இறுதி ஆட்டத்தில் வடபிராந்திய மதுவரித்திணைக்கள அணியும் யாழ். செயலக விளையாட்டுக் கழக அணியும், மோதிக்கொண்டன.

இரு அணிகளும் கடுமையான முறையில் போட்டியிட்ட போதிலும், ஆட்ட முடிவில் யாழ். செயலக விளையாட்டுக் கழக அணி 4:2 என்ற கோல்கணக்கில் வட பிராந்திய மதுவரித்திணைக்கள விளையாட்டுக்கழக அணியை வெற்றி கொண்டது.

யாழ்.செயலக விளையாட்டுக் கழக அணியின் கோல்காப்பாளர் பாஸ்கரன் சிறந்த விளையாட்டு வீரனாகத் தெரிவு செய்யப்பட்டார். (41)



தமிழீழ விளையாட்டுத்துறையால் நடாத்தப்படும் மேஜர் மாறன் நினைவான மின்னொளியிலான கரப்பந்தாட்டப் போட்டியின் ஐந்தாம் நாளான நேற்று இரவு நடைபெற்றபோட்டிகளில் யாழ். மாவட்டம் ஆவரங்கால் மத்தி, மன்னார் மாவட்டத்தைச் சேர்ந்த சென்பீற்றஸ் அணிகள் அறிமுகம் செய்து வைக்கப்படுவதையும், போட்டியில் கலந்து கொண்டுள்ளமையையும் படங் களில் காணலாம், முன்னதாக இடம்பெற்ற போட்டியில் மன்னார் மாவட்டம் அல்ஜின்னா அணியை யாழ் மாவட்டம் சிறி விக்னேஸ்வரா அணி 2–0 என்றபுள்ளி அடிப்படையில்வெற்றி பெற்றது. (தீ)



**சிந்தனைக்கு**

இரத்தம் சிந்தி, வியர்வை சிந்தி, கண்ணீர் சிந்தி தாங்கொணாத் துன்பத்தின் பரிசாகப் பெறுவதுதான் சுதந்திரம்.

தமிழீழ தேசியத் தலைவர்.

ஈழநாதம்
மக்கள் நாளிதழ்
யாழ்.சாலை,கிளிநொச்சி. 14-05-2005
தொலைபேசி 060-2213244
தொலைநகல் 021-2283948
மின் அஞ்சல் natham23 ela@ yahoo.com

## பொதுக் கட்டமைப்பும் நிதியுதவியும்!

சிறிலங்காவிற்கு உதவி வழங்கும் நாடுகளின் மாநாடு நடைபெற இன்னும் சில நாட்களே உள்ள நிலையில்-சுனாமி மீள் கட்டமைப்பிற்கான உதவிநிதி முகாமைத்துவம் தொடர்பான பொதுக்கட்டமைப்பு இம்மாநாட்டில் தாக்கத்தை ஏற்படுத்துமா? என்பது குறித்த வாதப்பிரதிவாதங்கள் பெருமளவில் நடைபெற்று வருகின்றன.

உதவி வழங்கும் மாநாட்டில் சுனாமி மீள்கட்டமைப்பு, இலங்கையின் பொருளாதாரக் கொள்கை, சமாதானம் மற்றும் அபிவிருத்தி போன்ற விடயங்கள் முக்கியமாக ஆராயப்படும் எனத் தெரிவிக்கப்படுகின்ற போதும், பொதுக்கட்டமைப்புக் குறித்து உதவி வழங்குவோர் எதையும் வெளிப்படையாகக் கூறியிருப்பதாக இல்லை.

இதேவேளை உலக வங்கியின் கொழும்பு வதிவிடப் பிரதிநிதியான பீற்றர் ஹரோல்ட் உலகவங்கி சுனாமியின் பின்னரான நிதியளிப்பிற்காக பொதுக்கட்டமைப்பை வலியுறுத்தவில்லை எனத் தெரிவித்துள்ளமை பொதுக்கட்டமைப்பு விவகாரம் உதவி வழங்குவோர் மாநாட்டில் எத்தகைய பாத்திரத்தை வகிக்கும் என்பதை உறுதிப்படுத்த முடியாத நிலையே உள்ளது.

ஆனால் சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க கண்டியில் உதவி வழங்குவோர் மாநாட்டிற்கு முன்பாக பொதுக்கட்டமைப்பு வியடத்தில் முன்னேற்றம் காணப்படவேண்டும் என்றவகையில் தனது நடவடிக்கையினை முனைப்புப்படுத்தியிருந்தார். அரசாங்கம் கவிழ்ந்தாலும் பொதுக்கட்டமைப்பு உருவாக்கப்படும் என அவர் தெரிவிக்கும் அளவிற்கு இவ்விடயத்தில் அவர் கருத்துக்களை வெளிப்படுத்தியிருந்தார்.

இதுமட்டுமன்றி இருதினங்களுக்கு முன்னர் தம்மைச் சந்தித்த உதவிவழங்கும் நாடுகளின் இலங்கைக்கான தூதுவர்களிடம் இன்னமும் இரண்டு வாரங்கள் கால அவகாசம் தரும்படியும் அதற்குள் பொதுக்கட்டமைப்பு உருவாகிவிடும் என உறுதியளித்திருப்பதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன. அதாவது பொதுக்கட்டமைப்பு விவகாரம் உதவிகளில் பாதிப்பு எதையும் ஏற்படுத்தாதவாறு அவர் மேற்கொண்ட உச்சக்கட்டமுயற்சியாக இது கொள்ளத்தக்கது.

அதாவது சனாதிபதி சந்திரிகா உதவிவழங்குவோர் மாநாட்டிற்கு முன்பாகப் பொதுக்கட்டமைப்புக் குறித்து தாம் சிரத்தையுடன் இருப்பதாகக் காட்டிக் கொள்ளும் செயற்பாட்டில் இறங்கினாரா? அன்றி நாட்டின் நலன்கருதி அவ்வாறானதொரு நிலைப்பாட்டிற்கு வந்தாரா? என்பது வேறு விடயம்.

இதேவேளை நிதியமைச்சரான சரத்அமுனுகம, வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன்கதிர்காமர் ஆகியோர் கூட சனாதிபதி சந்திரிகாவினால் பொதுக்கட்டமைப்பு நிறுவப்படும் என உறுதியளிப்பவர்களாகவே உள்ளனர். இந்த வகையில் ஆட்சியிலுள்ளவர்களில் முக்கியமானவர்கள் சிலர் அக்கறை கொண்ட விடயமாகவே பொதுக்கட்டமைப்பு உள்ளது.

இதேவேளை ஆளும் கூட்டணியில் உள்ளவர்கள் மட்டுமல்ல ஆளும் கூட்டணியில் பிரதான கட்சியான சிறிலங்கா சுதந்திரக்கட்சிக்குள்ளும் கூட பொதுக்கட்டமைப்புக் குறித்து சந்தேகங்களும், கேள்விகளும் மட்டுமல்ல எதிர்ப்புகளும் உள்ளது. எடுத்துக்காட்டாக ஐ.ம.சு.மு ஆட்சியில் சனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவிற்கு அடுத்த நிலையில் உள்ளவரான பிரதமர் மகிந்தராஜபக்ஷ பொதுக்கட்டமைப்புக் குறித்துத் தமக்கு எதுவும் தெரியாதெனக் கூறியுள்ள அதேவேளை சிரேஷ்ட அமைச்சர்களில் ஒருவரான ஜெயராஜ் பெனாண்டேபுள்ளே அவர்கள் உலக வங்கி நாட்டைக் குட்டிச்சுவராக்கிவிடும் எனத் தெரிவித்துள்ளார்.

இத்தகையதொரு நிலையில் சிறிலங்காவிற்கான நிதி உதவி விடயத்தில் பொதுக்கட்டமைப்பு எத்தகைய பாத்திரத்தை வகிக்க முடியும்? என அறுதியிட்டுக் கூறமுடியாது. ஒரு நாட்டிற்கான நிதியுதவியானது தனியாக நிதியுதவி பெறும் நாட்டின் தேவை, நலன் அதன் செயற்பாடுகள் என்பவற்றை மட்டுமே கொண்டு தீர்மானிக்கப்படுவதில்லை. வழங்குவோரின் தேவை, நலன் என்பனவற்றுடனும் சம்பந்தப்பட்ட விடயமாகும்.

குறிப்பாகச் சிறிலங்காவின் பொருளாதாரக்கொள்கை, செயற்பாடு,அதன் வெளியுறவுக்கொள்கை என்பனவற்றுடனும் அரசாங்கத்தின் ஸ்திரநிலை போன்றவையும் வெளிநாட்டு உதவிகளில் செல்வாக்குச் செலுத்தத்தக்கவையாகும் இதற்கு அப்பால் வெளிநாட்டு உதவிகளில் தாக்கம் விளைவிக்கும் காரணிகள் பலவீனமானவையே.

இந்நிலையில் பொதுக்கட்டமைப்பு விவகாரமானது சிறிலங்காவிற்கு உதவி வழங்குவோர் மாநாட்டில் விளைவிக்கப்போகும் தாக்கமானது தனித்துவமானதாக மட்டும் இருக்கப்போவதில்லை என்பது வெளிப்படையானது.ஆகையினால், பொதுக்கட்டமைப்பிற்கு அப்பாற்பட்டு, குறிப்பிடத்தக்க நிதியுதவி சிறிலங்காவிற்குக் கிடைக்கப் பெறலாம்.

ஆனால் ஒன்று உதவி வழங்குவோரும் சரி, வேறுயாராக இருப்பினும் சரி பொதுக்கட்டமைப்பு விடயத்தில் அக்கறை செலுத்தாது சிறிலங்காவிற்கு நிதியுதவி வழங்குவார்களேயானால் அவர்களும் இனப்பிரச்சினையிலோ, சுனாமியினால் தமிழ் மக்கள் சந்தித்த அவலத்திலோ அதாவது சமாதான முயற்சிகளிலோ அன்றி தமிழ் மக்களின் புனர்வாழ்விலோ அக்கறையற்றுள்ளனர் என்பதே வெளிப்படும் நிதர்சனமாக இருக்கும்.

## பொதுக்கட்டமைப்பை ஆதரித்துப் பேசுபவர்களுக்கு

# "தேரபுத்த பாய படை" கொலைப் பயமுறுத்தல்!

(கொழும்பு)

பொதுக்கட்டமைப்புக்கு ஆதரவாக அழைப்பு விடுத்துள்ள தலைவர்களிற்கு தேரபுத்த பாய படை எனத் தம்மை அழைக்கும் ஒரு அமைப்பு மிகக் கடுமையான தொனியில் மரண அச்சுறுத்தல் விடுத்துள்ளது.

"தாய்நாட்டின் எதிரிகளுக்கான அறிவித்தல் எனும் தலைப்பில் தலைவர் மாயாதுன்னையின் கையொப்பத்துடன் வெளியிடப்பட்டிருந்த அக்கடிதத்திலேயே இவ்வச்சுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது.

அதில் பத்திரிகையாளர் தர்மரட்ணம் சிவராமின் கொலைக்கு உரிமை கோரப்பட்டிருந்ததுடன், சகல தேசத்துரோகிகளும் அவர்கள் தொடர்ந்து தேசத்துரோகத்தில் ஈடுபட்டால் தாய்நாட்டிற்கு உரமாகத் தயாராக வேண்டும் எனவும் கூறப்பட்டுள்ளது.

ஏகாதிபத்திய சீனா, மலேசியா, தாய்லாந்து, இந்தியா தாமாகவே புலிகளுடன் இணைந்து நாட்டைப் பிரிக்கத் திட்டமிட்டுள்ளன. சமாதான காலத்தில் படிப்படியாக அவர்கள் தமிழீழத்தை நோக்கி முன்னேறியுள்ளனர்.

இந்நோக்கத்திற்காக நோர்வேயின் வெள்ளைப் புலிகளும், ஐ.தே.கட்சியின் பச்சைப் புலிகளும் ஒன்றாக இணைந்து தமது டொலர்ப்பைகளைக் காட்டி ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியை விடுதலைப் புலிகளுடன் இணைந்து பொதுக்கட்டமைப்பு என ஏமாற்று கின்றனர். புலிகள் பச்சை, வெள்ளை, நீலப் புலிகள் ஆகியோரும் அவர்களை டொலர் பணப் பைமூலம் இணைக்க முயலுவோரையும் நாம் இரவு பகலாக அவதானிக்கின்றோம் என்பதனைத் தெரிந்து கொள்ள வேண்டும் எனவும் எச்சரிக்கப்பட்டுள்ளது.

# அமெரிக்காவும், மேற்குலகமும் இந்தியாவைச் சிதைக்க பொதுக்கட்டமைப்பிற்கு நிர்ப்பந்திக்கின்றன!

### ஜே.வி.பி தலைவர் கூறுகின்றார்

(கொழும்பு)

"இந்தியாவில் பிரிவினையை ஏற்படுத்தி அதனை சின்னா பின்னமாக்கவே அமெரிக்கவும், மேற்குலகநாடுகளும் முனைகின்றன. அதற்காகவே விடுதலைப் புலிகளுடன் பொதுக்கட்டமைப்பை ஏற்படுத்துமாறு அவை இலங்கைக்குக் கூறுகின்றன" இவ்வாறு ஜே.வி.பியின்தலைவர் சோமவன்ச அமரசிங்க தெரிவித்துள்ளார்.

பொதுக்கட்டமைப்பு அமைக்கப்படுவதனை எதிர்ப்போம் எனும் தொனிப்பொருளின் கீழ் கடந்த புதனன்று கொழும்பு நகரசபை மைதானத்தில் நடைபெற்ற கூட்டத்தில் உரையாற்றும்போது அவர் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் உரையாற்றுகையில், நாம் அமைத்த அரசைக் கவிழ்க்க வேண்டிய தேவை எமக்கில்லை. அதனைக் கவிழ்க்க யாருக்கும் இடமளியோம். அரசைக்காக்க சனாதிபதியின் கரங்களைப் பலப்படுத்த நாம் எமது சக்தியை அளிப்போம் என அவர் அங்கு குறிப்பிட்டார். இல்லையேல் நாட்டைக்காக்க பரந்தளவிலான முன்னணி ஒன்றை அமைத்து நாம் போராடுவோம். அமெரிக்காவும், மேற்குலக நாடுகளும் இந்தியாவைப் பலவீனப்படுத்த விடுதலைப் புலிகளைப் பயன்படுத்துகின்றன. இதனால் சனாதிபதி எடுக்கும் முடிவுகள் இந்தியாவின் பாதுகாப்பிற்குக் குந்தகமாக இருக்கக் கூடாது.

விடுதலைப்புலிகளுடன் பொதுக் கட்டமைப்பு அமைக்கப்பட்டால் இலங்கையில் பிரிவினை ஏற்படுவதோடு சுயாதிபத்தியமும், இறைமையும் மீறப்படும். அதுமட்டுமல்லாது இந்தியாவின் பாதுகாப்பிற்கும் அது குந்தகமாக அமையும். அங்கும் பிரிவினைகள் தோன்றும். தெற்காசியப் பிராந்தியம் பலமற்றுப் போய்விடும். இந்தியாவில் பிரிவினையை ஏற்படுத்தி அதனை சின்னாபின்னமாக்கவே அமெரிக்காவும், மேற்குலக நாடுகளும் முனைகின்றன. அதற்காகவே விடுதலைப் புலிகளுடன் பொதுக்கட்டமைப்பை ஏற்படுத்துமாறுஅவை சிறிலங்காவுக்குக் கூறுகின்றன.

ஜே.ஆர்.ஜெயவர்த்தன கையாண்ட பிழையான வழிமுறைகளை சந்திரிகாவும் கையாளக் கூடாது. நாட்டின் பாதுகாப்பையும், சுயாதிபத்தியத்தையும் அவர் உறுதிப்படுத்த வேண்டும். பொதுக் கட்டமைப்பு அமைக்கப்படுமானால் மக்களுடன் வீதியில் இறங்கிப் போராடுவோம். எல்லாம் முடிந்து போய்விட்டதாக நாம் எண்ணக் கூடாது. நாட்டைக் கட்டியெழுப்ப எம்மால் முடியும். நாட்டின் கௌரவத்தை அடகு வைத்துக் கடன் வாங்கி நாட்டைக் கட்டியெழுப்ப முடியாது. எமது நாட்டின் பாதுகாப்பையும், இறைமையையும் பாதுகாக்க முடியுமாக இருந்தால் வேண்டியளவு கடன்களைப் பெற முடியும் எனவும் சோமவன்ச அமரசிங்க தெரிவித்தார்.

# சிறிலங்காவின் சுற்றுலாத்துறையைச் சீரமைக்க அமெரிக்கா நிதியுதவியளிக்க முடிவு

(கொழும்பு)

ஆழிப்பேரலையால் சீர்குலைந்துபோன சிறிலங்காவின் சுற்றுலாத்துறையைச் சீரமைக்க பெருமளவிலான நிதியுதவியை வழங்க அமெரிக்கா முன்வந்துள்ளதாக சிறிலங்கா சுற்றுலா வாரியத் தலைவர் உதய நாணயக்கார தெரிவித்துள்ளார்.

அமெரிக்காவின் சர்வதேச வளர்ச்சி நிறுவனம், இந்து சமுத்திரப் பிராந்தியத்தின் சுற்றுலா சீரமைப்பிற்காக 4.3 மில்லியன் டொலரை ஒதுக்கியுள்ளதாகவும், இதில் சிறிலங்காவிற்கு மூன்று மில்லியன் டொலர் அளிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் கூறினார்.

இது குறித்து உதய நாணக்கார மேலும் கூறியதாவது,

ஆழிப்பேரலைக்குப் பிறகு சுற்றுலாப் பயணிகளை நம்பியிருந்த தங்குமிடங்களின் அறைகள் அனைத்தும் வெற்றிடங்களாகவே இருக்கின்றன. இவற்றை நிரப்புவதே எமது முக்கிய பணி என அவர் கூறினார்.

# செப்ரெம்பர் வரையான காலப்பகுதியில் சூறாவளி, வெள்ள அபாயம் ஏற்படலாம்!

### வளி மண்டலவியல் திணைக்களம் எச்சரிக்கை

(கொழும்பு)

இம்மாத நடுப்பகுதியிலிருந்து செப்ரெம்பர் மாதம் வரையிலான காலப்பகுதியில் நாட்டின் மேற்கு மற்றும் தென்மேற்கு, மலையகப் பிரதேசங்களில் சூறாவளி, வெள்ள அபாயம் ஏற்படலாமென வளி மண்டலத்திணைக்களம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

இக்காலப்பகுதி தென்மேல் பருவக் காற்றுக் காலம் என்பதால் கடும் மழை, மண் சரிவு, சூறாவளி என்பன ஏற்படும் அறிகுறி இருப்பதாகவும் மக்கள் முன்னெச்சரிக்கையுடன் இருக்குமாறும் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

தென்மேல் பருவக்காற்றுக் காரணமாக கடற்கொந்தளிப்பு அதிகரிக்கவும் இதனால், கரையோரப் பகுதிகள் பாதிப்படைவதோடு கடும் மழை காரணமாக மலைநாட்டில் வெள்ளப் பெருக்கு, மண் சரிவு ஏற்பட வாய்ப்புள்ளதாக திணைக்கள அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

# சுனாமியின் பின் கிடைத்த பெருமளவு சர்வதேச உதவிகள் தமிழ் மக்களை சென்றடையவிடாது சிறிலங்கா அரசு தடுப்பு

## ஒரு ரூபாயால் குறைப்பு

கோதுமைமாவின் விலை மேலும் ஒரு ரூபாவினால் குறைக்கப்பட்டுள்ளது. இந்த விலைக் குறைப்பு நேற்று நண்பகல் தொடக்கம் அமுலுக்குக் கொண்டு வந்துள்ளதாக அமைச்சர் ஜெயராஜ் பெனாண்டோபுள்ளே கூறியுள்ளார். இதன்படி மாவின் விலை 22 ரூபா ஐம்பது சதமாகக் குறைவடைந்துள்ளது.

## அமெரிக்க மருத்துவ பேராசிரியை கண்டனம்

இலங்கையில் ஆழிப் பேரலையால் பாதிக்கப்பட்ட தமிழர்களுக்கு அமெரிக்காவின் எந்த ஒரு நிதியுதவியும் சென்றடையவில்லை என்று அமெரிக்காவின் கொர்னெல் மருத்துவக் கல்லூரிப் பேராசிரியை ஜெனிபர் றொபேர்ட்ஸ் அம்மையார் குற்றம் சாட்டியுள்ளார்.

நியூயோர்க் நகரத்திலுள்ள கொர்னெல் கல்லூரியில் பணியாற்றும் இப் பேராசிரியர் ஆழிப் பேரலையால் பாதிக்கப்பட்ட இலங்கையை மூன்று வாரங்கள் நேரில் பார்வையிட்டு அமெரிக்கா திரும்பினார். அங்கு நிகழ்வு ஒன்றில் பேராசிரியர் ஜெனிபர் றொபேர்ட்ஸ் பேசியதாவது: ஆழிப் பேரலையால் பாதிக்கப்பட்டவர்கள் அதிலிருந்து மீள்வதற்காக ஆலோசனைகளை வழங்குகின்ற பணியில் இருப்போருக்கான பயிற்றுநராகவே நான் அங்கு சென்றேன். ஆழிப் பேரலையால் இலங்கையின் வடக்கு மற்றும் கிழக்குப் பகுதிகளே கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளன. அங்கு அமெரிக்க நாட்டின் எந்த ஒரு நிதியுதவியும் சென்றடையவில்லை. அமெரிக்கா, ஐரோப்பிய ஒன்றியம், நோர்வே உள்ளிட்ட நாடுகள் இலங்கைக்குப் பெருமளவிலான நிதியுதவிகளை அனுப்பியபோதும் வடக்குக் கிழக்குத் தமிழ்மக்களுக்கு அந்த நிதியுதவிகள் சென்றடைய வில்லை. அவற்றை சிறிலங்கா அரசு தடுத்துவிட்டது. ஆனாலும் வடக்குக் கிழக்குத் தமிழர்களுக்கு நான் அதிக மரியாதை செலுத்து கிறேன். ஏனென்றால் தங்களிடம் இருக்கிற குறைந்த வளங்களை வைத்துக் கொண்டு தங்களைக் காப்பாற்றிக் கொண்டு வருகிறார்கள். ஒரு அமெரிக்கக் குடிமகளாக இருப்பதில் நான் பெருமைப்படுகிறேன். ஆழிப் பேரலைக்காக அமெரிக்கா பெருமளவு நிதியுதவி கொடுத்தது என்பதற்காக, ஆனால் இலங்கையின் அனைத்துப் பகுதி மக்களையும் இந்த நிதியுதவி சென்றடையவில்லை. தமிழ்க் குழந்தைகளின் கல்விச் சூழலிலும் கூட சிறிலங்கா அரசு பாதிப்புக்களை ஏற்படுத்தி வருகிறது. பெருமளவிலான நிதியுதவி கொழும்பிலே குவித்து வைக்கப் பட்டிருக்கிறது. இதற்குக் காரணம் சிறிலங்கா அரசின் தலையீடு மற்றும் ஊழல் ஆகியவைதான்.

தமிழீழ விடுதலைப்புலிகளின் நிர்வாகப் பகுதிகளுக்கும் நான் சென்று பார்வையிட்டேன். தமிழர் புனர்வாழ்வுக் கழகம் தம்மால் இயன்ற அளவில் மிகச் சிறப்பான மீளமைப்புப் பணிகளை மேற்கொண்டு வந்தனர். இந்த மீளமைப்புப் பணிகள் எல்லாம் ஒரு ஒழுங்கமைவின் கீழ் இருந்தன. ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்டிருந்த குழந்தைகளுக்கான கல்விக் கூடங்களையும் அவர்கள் மீள உருவாக்கியிருந்தனர். தாற்காலிக குடியிருப்புகளையும், மீனவர்களுக்காக படகுகளையும் புனர்வாழ்வுக் கழகம் வழங்கியது. அதே நேரத்தில் சிறிலங்கா அரசு நிர்வாகப்பகுதியான தென்னிலங்கையைப் பார்வை யிட்டபோது வடக்கை விட மோச மான சூழலே காணப்பட்டது. தென்னிலங்கையில் அமெரிக்காவின் உதவிகளைப் பெருமளவில் காண நேரிட்டது. ஆனால் வடக்கில் ஒரு இடத்தில் கூட அமெரிக்க கொடியைக் காண வில்லை. நோர்வே, ஜேர்மனிய உதவிகள் மட்டுமே சில இடங்களில் அங்கு வழங்கப்பட்டு வந்தது என்று கூறினார்.

### அமைதிப்....

கிறோம். கடந்த ஆண்டின் இறுதி வரையில் மொத்தம் 570 மில்லியன் டொலரை இலங்கைத்தீவகத்திற்கு வழங்க அமெரிக்கா முன்வந்தது. மூன்று மீன்பிடித் துறைமுகங்களை சீரமைக்கவும், 14 தொழிற்பயிற்சி நிலையங்கள் மற்றும் ஒரு பாலம் ஆகியவற்றை உருவாக்கவும் அமெரிக்கா முன்வந்தது. அத்துடன் கடலோர சுற்றுலா விடுதிக் கட்டுமானங்களையும் ஆழிப் பேரலையால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் 100 விளையாட்டு மைதானங்களையும் உருவாக்க அமெரிக்கா திட்டமிட்டிருக்கிறது என்றும் அவர் கூறினார்.

### தமிழீழ...

இதனையடுத்து தமிழ் மாணவர்கள் ஏற்றப்பட்ட சிறிலங்காவின் தேசியக் கொடி இறக்கப்படவேண்டுமெனக் கோரிக்கை விடுத்தனர்.எனினும் அந்த கோரிக்கையும் ஏற்றுக் கொள்ள வில்லை. இதனையடுத்து தமிழர்கள் பெருமளவில் வாழும் பிரதேசத்தில் தமிழீழத் தேசியக் கொடி ஏற்றப்படாவிட்டால் விளை யாட்டு போட்டிகளிலிருந்து தாம் வெளியேறப்போவதாகக் கூறி தமிழ் மாணவர்கள் வெளியேறினர். (32)

### மக்கள்....

இந்தக் கண்டனக் கடிதங்கள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

தமிழீழ மாணவர் சங்க தலைவர் ரீகனின் தலைமையில் மாணவர்கள் இந்தக் கடிதக்கையளிப்பில் பங்கேற்றனர். சமாதான காலத்தில் மக்களின் எழுச்சிகளை அடக்க முற்பட்டால் தாம் தமிழ்த் தேசியத்துக்காக போராட வேண்டியேற்படுமென இந்தக் கடிதங்களில் மாணவர் சங்கம் எச்சரித்துள்ளது.

# பதின்மூன்று வயதுச் சிறுவனை மீசாலையில் காணவில்லை!

### -ம.உ. ஆணைக்குழுவில் முறைப்பாடு

(யாழ்ப்பாணம்)

யாழ்.மீசாலையில் பதின்மூன்று வயதுச்சிறுவன் காணாமல் போயுள்ளார். மீசாலை கிழக்கு, மீசாலை எனும் முகவரியைச் சேர்ந்த பாலசுப்பிரமணியம் பவிலரூபன் என்ற சிறுவனே காணாமல் போயுள்ளார்.

மேற்படி சிறுவன் கடந்த புதன் கிழமை அன்று காணாமல் போயுள்ளதாக சிறுவனின் தந்தை மனித உரிமை ஆணைக்குழுவில் நேற்று முன்தினம் முறைப்பாடு செய்தார்.

இதேவேளை பரராஜசிங்கம் லக்சுமிப்பிள்ளை (பராசக்திப்பிள்ளை) வயது 52 வறணி நாவற்காடு எனும் குடும்பப்பெண் கடந்த மார்ச் 24 ஆம் திகதி முதல் காணாமல் போயுள்ளார். இவரது மகன் பரமேஸ்வரன் நேற்று முன்தினம் மனித உரிமைகள் ஆணைக்குழுவிடம் முறைப்பாடு செய்துள்ளார். இவர்கள் பற்றிய தகவல் தெரிந்தவர்கள் யாழ்.மனித உரிமை ஆணைக்குழுவிற்கு தெரிவிக்குமாறும் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளனர்.. (சு)

# தேசிய மட்ட நாடகப் போட்டியில் கிளி.மத்திய கல்லூரி முதலிடம்

அகில இலங்கை ரீதியில் நடைபெற்ற நாடகப்போட்டியில் கிளிநொச்சி மத்திய கல்லூரி முதலாம் இடத்தைப் பெற்றுக்கொண்டது.

உலக சூழல் தினத்தை முன்னிட்டு அகில இலங்கை ரீதியாக பாடசாலைகளுக்கிடையே கொழும்பில் கடந்த ஏழாம் திகதி நடைபெற்ற நாடகப் போட்டியில் கிளிநொச்சி மத்திய கல்லூரி மாணவர்களால் மேடையேற்றப்பட்ட "புதிய உலகம்" எனும் நாடகம் முதலாம் இடத்தைப் பெற்றுக் கொண்டது.

# உடையார்கட்டு பிரதேசத்தில் முக்கிய கலந்துரையாடல்

(உடையார்கட்டு)

உடையார்கட்டுப்பிரதேச பொது அமைப்பு பிரதிநிதிகளுடனான முக்கிய கலந்துரையாடல் ஒன்று எதிர் வரும் 17ஆம் திகதி நடைபெறவுள்ளது என உடையார்கட்டுப்பிரதேச அரசியல் துறைப் பொறுப்பாளர் இ.புகழரசன் தெரிவித்துள்ளார்.

உடையார்கட்டு மகாவித்தியாலயத்தில் மாலை 4.30 மணிக்கு இக் கலந்துரையாடல் இடம்பெறும்.

இக்கலந்துரையாடலில் உடையார் கட்டுப்பிரதேச அனைத்து பொது அமைப்புக்களின் பிரதிநிதிகளையும் தவறாது கலந்து கொள்ளுமாறு அவர் கேட்டுள்ளார்.(19)

### பொது....

கைச்சாத்தாகும் என நான் நம்புகின்றேன்.

கிழக்கில் நடைபெறுகின்ற மனித உயிர்ப் படுகொலைகள் நிறுத்தப்பட வேண்டும். அத்துடன் பத்திரிகையாளர் தர்மரட்ணம் சிவராம் ஒரு மூத்த பத்திரிகையாளர். அவரின் இழப்பு பத்திரிகையாளராகிய உங்களுக்கும் ஓர் இழப்பாகும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

### பொதுக்கட்டமைப்பு...

நெருக்குவாரங்கள் கெடுபிடிகள் அதிகரித்து தற்பொழுது மக்கள் முழு அளவில் இந்த சமாதான முன்னெடுப்புகள் மீதான நம்பிக்கை இழந்து மக்கள் ஒரு கொந்தளிப்பான நிலைமைக்கு வந்திருக்கின்றார்கள் என்பதை அனுசரணையாளர்கள் என்ற வகையில் அவர்களுக்கு எடுத்து விளக்கியிருக்கின்றோம்.

கண்காணிப்புக் குழுவின் பிரசன்னத்தின் மத்தியிலேயே எங்களுடைய மக்கள் தாக்கப்பட்டிருக்கின்றார்கள், கொல்லப்பட்டிருக்கிறார்கள். ஆகவே மக்கள் இந்த யுத்த நிறுத்த சூழல் மீது முழு அளவிலான நம்பிக்கை இழந்த ஒரு சூழ்நிலையை உருவாக்கியுள்ளது. என்பதையும், தற்போது உள்ள சூழ்நிலைகள் பற்றியும், அண்மையில் தமிழ் ஊடகவியலாளர் சிவராம் அவர்கள் படுகொலை செய்யப்பட்ட சம்பவம் இதற்குப் பின்னால் படைத் தரப்பினதும், இலங்கை அர சாங்கத்தினுடையதும் நடவடிக்கைகள், இப்படியான படுகொலை முயற்சிகள் அனைத்துமே தமிழ்மக்களுக்கு சமாதான முன்னெடுப்பு மீதான நம்பிக்கை இழப்பை ஏற்படுத்தியிருக்கின்றது. என்பதை இன்று நாங்கள் எடுத்து விளக்கியிருக்கின்றோம்.

*. பொதுக் கட்டமைப்பு அமைப்பதில் ஏற்பட்டுள்ள சிக்கல்கள் அல்லது ஏற்பட்டிருக்கின்ற முக்கியமான பிரச்சினை என்ன?

எங்கள் தரப்பில் இது சம்பந்தமாக ஒன்றுமே இல்லை. தெற்கிலே இலங்கை அரசாங்கத்தின் பிரச்சினையாகவே இது இருக்கின்றது. ஆகவே நாங்கள் பேசுவதற்கு ஒன்றுமே இல்லை. ஏற்கனவே நோர்வேத்தரப்பு தந்த வரைவு சம்பந்தமான எங்களுடைய இணக்கப்பாட்டை நாங்கள் தெரிவித்திருக்கின்றோம் ஆகவே தெற்கிலே சனாதிபதியுடையதும், அவர்களுடைய கூட்டுக்கட்சிகளுடையதும் பிரச்சினையாகத்தான் அது இருக்கின்றது.

*. பொதுக்கட்டமைப்பு உருவாகாவிட்டால் அதற்கான மாற்று ஏற்பாடுகள் ஏதாவது இருக் கின்றதா?

ஏற்படாமல் விட்டால் அதற்கான மாற்றுத்திட்டம் குறித்து எங்களுடைய தலைமைப்பீடம் நிச்சயமாகத் தீவிர பரிசீலனை செய்யுமென நான் நினைக்கின்றேன்.

*. நோர்வேத் தூதுவர் இந்தியா சென்றபோது அங்கு பேசப்பட்ட விடயங்கள் குறித்து ஏதாவது உங்க ளிடம் கதைத்து ஆலோசித்தாரா?

அதாவது அயல் நாடு என்ற வகையில் இந்தியாவுக்கும் இங்கு சூழ் நிலைகள் நிலைப்பாடுகள், சமாதான முன்னெடுப்புக்கள், சமகால நிகழ்வுகள் பற்றி இவர்கள் அனுசரணையாளர்கள் என்ற வகையில் எடுத்து விளக்கி இருக்கின்றார்கள்: ஆகவே இந்தியாவும் இந்த சமாதான முன்னெடுப்புக்கள் மீது ஆர்வமாக இருந்ததாக அவர்கள் எங்களுக்கு வந்து தெரிவித்திக்கிறார்கள்.

*. நோர்வேயின் விசேட தூதுவர் இந்தியாவுக்கு விஜயம் செய்த நேரத்தில் இலங்கையின் நோர்வேத் தூதுவர் வடபகுதிக்கு விஜயம் செய்து சுனாமியால் பாதிக்கப்பட்ட இடங்களைப் பார்வையிட்டு உங்களுடன் பேச்சு நடத்தி இருக்கின்றார். இரண்டுக்கும் ஏதேனும் தொடர்புகள் அல்லது முக்கியமான சந்திப்பு என்று சொல்லப்போகின்றீர்களா?

நோர்வே அனுசரணையாளர்கள் என்ற வகையில் அவர்கள், அவர்களோடு சம்பந்தப்பட்ட எல்லோரும் அனைத்து நகர்வுகளையும் செய்து கொண்டிருப்பார்கள் என நம்புகின்றேன். அந்த அடிப்படையில் இறுக்கமடைந்து போகின்ற இந்த சூழ்நிலைப்பற்றி சர்வதேச சமூகத்திற்கு தெளிவாக்குவதும், இங்கு சமகால நிலமைகள் பற்றி எங்களுடைய கருத்துக்களையறிவதற்குமாகத்தான் அவர்கள் இங்கு வந்திருக்கிறார்கள்.

*. பொதுக் கட்டமைப்பு விரை வில் அமைக்கப்படாமல் விட்டால் விடுதலைப்புலிகள் பிரதேசத்துக்கு குறிப்பாக வடகிழக்கு பகுதிகளுக்குரிய நிவாரண பணிகளுக்கான நிதி அதாவது சர்வதேசத் தின் நிதி சர்வதேச தொண்டர் அமைப் புக்களினூடாக வழங்கப்படும் அதற்கான ஏற்பாடுகள் நடை பெறுகின்றன... என்று ஒரு தகவல் வெளியாகியுள்ளது இது பற்றி?

பொதுக்கட்டமைப்பு என்பது தான் எங்களுடைய மக்களின் பிரச்சினை அல்ல. கடந்த 25, 30 வருடங்களாக எமது மக்கள் யுத்தத்தால் பாதிக்கப்பட்டு பெருமளவு மனிதாபிமான நெருக்கடிகளை எதிர்கொண்டுள்ளார்கள் அந்த மக்களுடைய பிரச்சினைக்குத் தீர்வு காணப்படவேண்டும். அண்மையிலே இந்தச் சுனாமி அனர்த்தத்தால் எங்களுடைய கரையோரப் பகுதிகள் பெரும் அழிவைச் சந்தித்துள்ளது. அந்த நிலையில் சர்வதேச சமூகம் விரைந்து அவர்களுடைய மனிதாபிமான உதவிகளை இந்த மக்களுக்குக் கொண்டு வருவதற்கான ஒரு ஒருங்கமைப்பை எதிர் பார்க்கிறார்கள்.ஆகவே அதற்கான தீர்வு காணப்படவேண்டும் என்பது இன்றைய தேவையாக இருந்தாலும் ஒட்டுமொத்தமாகவே இன்று எங்களுடைய மக்கள் அனைவருடைய பிரச்சினைகளுக்கும் தீர்வு காணக்கூடிய ஒழுங்கமைப்பை விரைந்து ஏற்படுத்திக்கொண்டால் தான் எங்கள் மக்களுக்கு ஓரளவு ஆறுதலைத்தரும். ஆகவே பொதுக் கட்டமைப்பை வைத்துக்கொண்டு இதுதான் எங்களுடைய மக்கள் பிரச்சினை என்பது அல்ல. யுத்த நிறுத்த சூழல் நெருக்கடி அடைந்து, இராணுவ நெருக்குவாரங்கள், தீவிரமடைந்து மக்கள் படுகொலை செய்யப்பட்டுக் கொண்டு இருக்கிறார்கள். மக்கள் மிக மோசமான நெருக்கடியான வாழ்வு நிலையைச் சந்தித்துக் கொண்டிருக்கிறார்கள். இவை எல்லாம் கவனத்தில் எடுத்துக் கொள்ளப்படவேண்டும் என்று நோர்வேத்தரப்பிற்கு எடுத்து விளக்கியிருக்கின்றோம் என்றார்.(தீ)

தென்மராட்சியில்...
பொருளியல் கருத்தரங்கு
யாழ், விக்னா, DMI என்பவற்றைத் தொடர்ந்து
சாவகச்சேரி
பிறைற்ரினில்
பகுதிI, பகுதி II முழுப் பாடத்திட்டமும்
M.C.Q உம் மீட்கப்படும்
K.உதயன் அனுமதியை முன் கூட்டியே பெறவும்

இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2005 ஆம் ஆண்டு மே மாதம் 14ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.